*Excellence, Innovation and Sustainable Development*

**සී/ස ලංකා පොස්පේට් සමාගම**

**வரையறுக்கப்பட்ட**
**இலங்கை பொஸ்பேட் நிறுவனம**

# LANKA PHOSPHATE LTD

(PB 308)

## වාර්ෂික වාර්තාව – 2015/16

## ஆண்டு அறிக்கை – 2015/16

## ANNUAL REPORT 2015/16

நோக்கு

*" எப்பாவல பாறை பொஸ்பேட் படிவுகளை உத்தம மட்டத்தில் பயன்படுத்துவதன் மூலம் எங்கள் தாய்நாட்டின் மண்வளத்தினை வளப்படுதது்வதற்கு தேவையான பொசுபரஸ்ஸினை வழங்குதல்*



குறிக்கோள்

*"சூழலுக்கு இசைவான மற்றும் அரச நுணுக்க செயன்முறையினூடாக பொசுபரஸ்ஸில் தன்னிறைவு இருக்கின்றதன்மூலம் தேசிய தேவைப்பாடுகளை பூர்த்திசெய்வதற்கு"*

# உள்ளடக்கம்


- பணிப்பாளர் சபை 03
- தாபனத் தகவல்கள 04-05
- நிதிசார் முக்கிய பதிவுகள 06
- தலைவரின் அறிக்கை 07-09
- சிரேஷ்ட முகாமையாளர்கள 10
- முகாமையாளர்கள 11
- பணிப்பாளர்களின் அறிக்கை 12-17
- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு அறிக்கை 18

  கணக்காய்வாளர் அறிக்கை 19-21
  விபரமான வருமானக் கூற்று 22
  நிதிசார் நிலைக் கூற்று 23-24
  உரிமை மூலதன மாற்றக்கூற்று 25
  காசுப்பாய்ச்சற் கூற்று 26-27
  முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் 28-46
  நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள 46-59

- செயற்பாடுகள் பற்றிய மீளாய்வு 60-63
- கூட்டத்திற்கான அறிவித்தல் 64-65
- பதிலிப் படிவம் 66

## பணிப்பாளர் சபை



திரு. உபாலி. ஏ .திசாநாயக்க
தலைவர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர்



திரு. ஆர்.என்.கே ரணவீர
நிறைவேற்றுப் பணிப்பாளர்



திருமதி. எஸ்.ஏ.சி.குலதிலக
பணிப்பாளர்



திரு.ஏ.எம்.எம் பன்டா
பணிப்பாளர்



திரு. ஐ.எம். ஹெட்டியாரச்சி
பணிப்பாளர்



திரு.எம்.ஆர்ஞானதிலக
பணிப்பாளர்



திருமதி. பீ.எச் ஹன்துன்ஹேவா
பணிப்பாளர்

# தாபனத் தகவல்கள்

**கம்பனியின் பெயர்**

வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட்

**அமைந்துள்ள இடமும் சட்ட அமைப்பும்**

வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட் கம்பனி, அரச சுரங்கத்தொழில் மற்றும் கனிப்பொருட்கள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் எப்பாவல பொஸ்பேட் செயற்திட்டத்தைப் பொறுப்பேற்பதற்கு 1987 ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க பொதுக் கம்பனிகளை அரச உடைமையாக்கப்பட்ட வியாபாரத்தை பொறுப்பேற்றல் அல்லது பொதுக் கூட்டுத்தாபனங்களின் மாற்றத்தின் மூலம், 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டது. எவ்வாறாயினும் பின்னர், இக்கம்பனி 2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**பிரதான நடவடிக்கைகளும் செயற்பாடுகளின் தன்மையும்**

பல்லாண்டுப் பயிர்ச்செய்கைகளுக்கு பயன்படுத்தக்கூடிய பாறைப் பொஸ்பேட்டுக்களை அகழ்தல்,பதனிடல்,விற்பனை செய்தல் என்பன கம்பனியின் பிரதான நடவடிக்கைகளாகும்.

**பதிவு இல.** பீபி 308

**பணிப்பாளர்கள் சபை**

திரு. யூ. ஏ. திசாநாயக்க - தலைவர்<br>
திரு. ஆர்.என்.கே ரனவீர - நிறைவேற்றுப் பணிப்பாளர்<br>
திருமதி. எஸ்.ஏ.சி குலதிலக - பணிப்பாளர்<br>
திரு.ஏ.எம்.எம் பன்டா - பணிப்பாளர்<br>
திரு. ஐ.எம்.ஹெட்டியாரச்சி - பணிப்பாளர்<br>
திரு.எம்.ஆர்ஞானதிலக - பணிப்பாளர்<br>
திருமதி. பீ.எச் ஹன்துன்ஹேவா - பணிப்பாளர்

**கம்பனி செயலாளர்**

பினான்சியல் சேர்விசஸ் அன்ட் கொமர்ஷல்<br>
ஏஜன்சீஸ் (பிறைவட்) லிமிடட்,<br>
இல. 28,ரொஸ்மிட் பிளேஸ்,<br>
கொழும்பு 07.

**இறுதி தாய்க் கம்பனி**

கம்பனியின் விநியோகிக்கப்பட்ட பங்குகள்,இலங்கை அரசாங்கத்தின் சார்பாக திறைசேரி செயலாளரால் முழுமையாக உரிமையாக்கப்பட்டுள்ளன.

## உரிய அமைச்சு

விவசாய அமைச்சு,
“கொவிஜன மந்திரய”
இல. 5∴80, ரஜமல்வத்த ஒழுங்கை,
பத்தரமுல்ல

## பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்

இல.73 1∴1இபுதிய களனி பாலம் வீதி,
கொழும்பு 14.
தொலைபேசி: ூ94112459906∴7
தொலைநகல்:ூ94112459908

## கணக்காய்வாளர்கள்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
திணைக்களம்
306∴72, பொல்தூவ வீதி,
பத்தரமுல்ல.

## வரி ஆலோசகர்கள்

அமரசேகர அன்ட் கோ.
பட்டய கணக்காளர்கள்,
இல. 12,ரொட்டன்ரா கார்டின்ஸ்
கொழும்பு 03.

## வங்கியாளர்கள்

இலங்கை வங்கி
தேசிய சேமிப்பு வங்கி
மக்கள் வங்கி
ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ

# நிதிசார் முக்கிய பதிவுகள்

**வருடத்திற்குரிய விளைவுகளின் பொழிப்பு** **(ரூபா. ‘000)**

| | 2015/16 | 2014/15 | 2013/14 | 2012/13 | 2011/12 |
|---|---|---|---|---|---|
| வருமானம் | 562, 735 | 530,431 | 499,969 | 399,031 | 491,280 |
| ஆண்டிற்கான தேறிய இலாபம் | 26,587 | 100,089 | 134,385 | 79,536 | 129,805 |
| விரிவான மொத்தவருமானம் | 29,578 | 101,173 | 131,662 | 98,150 | 144,001 |

**வருட இறுதியிலுள்ள பொழிப்பு** **(ரூபா. ‘000)**

| | 2015/16 | 2014/15 | 2013/14 | 2012/13 | 2011/12 |
|---|---|---|---|---|---|
| பங்குதாரர்களின் நிதி | 760,315 | 760,737 | 694,564 | 587,901 | 534,705 |
| தொழிற்படு மூலதனம் | 482,608 | 411,167 | 492,724 | 511,821 | 462,171 |
| மொத்த சொத்துக்கள் | 860,451 | 844,245 | 766,140 | 640,020 | 612,678 |
| பதவியணி கிரயம் | 236,020 | 192,571 | 162,284 | 156,989 | 161,143 |
| ஊழியர்களின் எண்ணிக்கை (எண்) | 347 | 339 | 285 | 285 | 294 |

**பங்கு ஒன்று**

| | 2015/16 | 2014/15 | 2013/14 | 2012/13 | 2011/12 |
|---|---|---|---|---|---|
| | | | (ரூபா.) | (ரூபா.) | |
| வருவாய் | 4.08 | 13.95 | 18.53 | 10.97 | 17.9 |
| தேறிய சொத்துக்கள் | 104.86 | 104.91 | 95.79 | 81.08 | 73.06 |

| **விகிதங்கள்** | **2015/16** | **2014/15** | **2013/14** | **2012/13** | **2011/12** |
|---|---|---|---|---|---|
| நடைமுறை விகிதம் (தடவைகள்) | 7.41 | 8.91 | 14.06 | 21.41 | 12.67 |
| பங்குதாரர்களின் நிதியிலிருந்தான வருமானம் (%) | 3.89% | 13.2% | 19.3% | 13.5% | 24.3% |

# தலைவரின் அறிக்கை



வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் கம்பனி (எல்பீஎல்) அரச சுரங்கத்தொழில் மற்றும் கனிப்பொருட்கள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் எப்பாவல பொஸ்பேட் செயற்திட்டத்தை பொறுப்பேற்பதற்கு 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க பொதுக் கூட்டுத்தாபனங்களை அல்லது அரசாங்கத்துக்குச் சொந்தமான தொழிற்பொறுப்பு முயற்சிகளை பொதுக் கம்பனிகளாக மாற்றுதல் சட்டத்தின் நியதிகளுக்கு அமைய 1992 ஆம் ஆண்டு யூலை 10 ஆம் திகதி கூட்டிணைக்கப்பட்டது. இது இலங்கை அரசாங்கத்தின் சார்பாக திறைசேரிச் செயலாளருக்கு முழுமையாக சொந்தமான கம்பனி ஆகும். இக்கம்பனி, 1998நவம்பர் மாதம் வரையறுக்கப்பட்ட போகல கிரபைட் கம்பனியிடமிருந்து வேறாக்கப்பட்டதிலிருந்து ஒரு முழு சுதந்திரக் கம்பனியாக தொழிற்பட்டுவருகின்றது. அநுராதபுர மாவட்டத்தில் எப்பாவல பிரதேசத்தில் அமைந்துள்ள 450 ஹெக்ரயர் காணிப் பிரதேசத்தை உள்ளடக்கிய பாறைப் பொஸ்பேட் படிவுகளை அகழும் ஏகபோக உரிமையைக் கொண்டதாக இக்கம்பனி காணப்படுகின்றது. இந்த தாது 60 மில்லியன் தொன்களாக மதிப்பிடப்பட்டு ஏறத்தாழ $P_2O_5$ இன்33% - 40%,அளவைக் கொண்டதாகும். இது உலகில் உள்ள செழுமைமிக்க, தனித்துவம் வாய்ந்த பொஸ்பேட் ஒன்றாக கருதப்படுகின்றது.

தற்போதுஇக் கம்பனி,இரண்டு வகையான பாறை பொஸ்பேட் பசளைகளான எப்பாவல பாறைப் பொஸ்பேட் (ERP) மற்றும் உயர்தர எப்பாவல பாறைப் பொஸ்பேட்களை (HERP) உற்பத்தி செய்கின்றது. இலங்கையில் பயிரிடப்படுகின்ற பல்லாண்டுப் பயிர்ச்செய்கைகளுக்கு பசளையாக இப் பொஸ்பேட்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக (எல்பீஎல்) வாரியபொல,கனத்தவெவ பகுதியில் ஓர் தென்னம் பசளைக் கலவை இயந்திரம் ஒன்றை இயக்கி வருகின்றது. எவ்வாறெனினும்,இப்பெறுமதி மிக்க பாறைப்படிவுகளின் மூலம் நாட்டிற்கு

மிகச் சிறந்த பயன்களை வழங்கக்கூடியதாக இருக்கின்றது.

தற்போது ஆண்டொன்றிற்கு ஏறத்தாழ 60,000 மெட்ரிக் தொன் எப்பாவல பாறைப் பொஸ்பேட்களை நாம் வருடாந்தம் உற்பத்தி செய்து பெருந்தோட்டப் பயிரினத் துறைக்கு அவற்றைச் சந்தைப்படுத்தி வருகின்றோம்.பெருந்தோட்ட பயிர்களான தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் பழப் பயிர்ச்செய்கை ஆகியவற்றிற்கு எமது பசளைகள் பயன்படுத்தப்படுகின்றன. தேயிலை பயிர்ச் செய்கை60%மான எப்பாவல பொஸ்பேட்டை பயன்படுத்துகின்ற அதேவேளை இறப்பர் மற்றும் தெங்கு துறைகள் பயன்பாட்டின் 30% பகிர்வைக் கொண்டுள்ளன. முக்கியமாக ஏற்றுமதிப் பண பயிர்களும் பழப் பயிர்களும் எஞ்சிய பகுதியைப் பயன்படுத்துகின்றன. உள்நாட்டு பொஸ்பேட் பசளைகளை பயன்படுத்துவதால் ஆண்டுதோறும் ரூபா 500 மில்லியனிற்கும் மேலான குறிப்பிடத்தக்க அன்னிய செலாவணியை மீதப்படுத்தக் கூடியதாக உள்ளது.

கம்பனியின் வரலாற்றில் எப்போதும் இல்லாத உயர் விற்பனையான ரூபா 562.7 மில்லியன் மொத்தப் புரள்வு2015/2016 நிதி ஆண்டில் எய்தப்பட்டிருந்தது. மேலும்,வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் முறையே எப்பாவல பாறைப் பொஸ்பேட்டுகளில் (ERP) 46,925.85 மெட்ரிக் தொன் உயர்தர எப்பாவல பாறைப் பொஸ்பேட்டுக்களில் (HERP) 7,901.05 மெட்ரிக் தொன் தெங்குப் பசளைகளில் (APM/YPM)1611.3 மெட்ரிக் தொன் விற்பனை நிலையையும் எய்தியிருந்தது. தனியாள் மற்றும் நிர்வாகச் செலவினங்களில் அதிகரிப்பு நிலவிய போதிலும் ரூபா 60.9 மில்லியன் தொகையான வரிக்கு முந்திய இலாபத்தை கம்பனியால் ஈட்டக்கூடியதாக இருந்தமையையும் கருத்திற்கொள்ள வேண்டும்.எதிர்வரும் ஆண்டுகளில் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓர் நிலையில் கம்பனியின் இலாபத்தன்மையை உயர்த்துவதற்கு திட்டமிடலிலும் ஒழுங்கமைப்பிலும் பலவிடயங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. தென்னை ஆராய்ச்சி நிறுவகம் மற்றும் வரையறுக்கப்பட்ட சிலோன் பேர்டிலைசர் நிறுவனத்துடன் இணைந்து வருடாந்த மற்றும் பல்லாண்டுப் பயிர்ச்செய்கைகளின் மீதான பசளைப் பயன்பாடு குறித்த அறிவை வளர்த்துக்கொள்ளுமுகமாக பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட வேண்டியுள்ளது.

எதிர்காலத்தில் எமக்கு பாரிய சவால்கள் உள்ளன. நிறுவனத்தின் பணிப்பாளர் சபை, எப்பாவல பொஸ்பேட் படிவுகளின் உச்சப் பயன்பாட்டின் பொருட்டு நடைமுறையில் காணப்படுகின்ற மற்றும் புதிய வியாபார முயற்சிகளில் வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்வதற்குத் தேவையான தீர்வுகளை முன்வைப்பது கடப்பாடாக உள்ளது.

நாட்டின் மொத்தத் தேவைப்பாட்டை ஈடுசெய்யும் வகையிலான குறுங்கால விளைச்சலைத் தருகின்ற பயிர்ச் செய்கைகளுக்குத் தேவையான பசளை வகைகளான TSPமற்றும் SSP ஆகியவற்றின் தேசிய மட்டத்திலான தேவைப்பாடுகளின் முக்கியத்துவத்தை நாம் உணர்ந்துள்ளோம்.

எல்பீஎல் நிறுவனம் பொறுப்புவாய்ந்த ஓர் அரசாங்க நிறுவனமாக தேசிய பொருளாதாரத்திற்கு தேவையான விவசாய உற்பத்தித் திறனை அதிகரித்துக் கொள்ளுகின்ற அதேவேளை தாய் நாட்டின் மண் வளத்தை மேம்படுத்துவதற்கான அனைத்து ஆதரவையும் வழங்குகின்றது. நாட்டு மக்களுக்குத் தேவையான பாரிய சேவைகளை வழங்கும் அதேவேளையில் கம்பனி அதன் அளவு மட்டக்குறி (Benck mark) அடையும் என்பது குறித்தும் நாம் நம்புகின்றோம்.

தமக்கு உரிய துறைகளில் உரிய விருத்திகளுடன் சகல நிலைகளிலும் தேவையான திறனை வளர்ப்பதற்கு பெறுமதி சேர் உற்பத்திகளையும் மனிதனுக்கு உகந்த சூழலையும், பதவியணி பயிற்சி நிகழ்ச்சிகளையும் அறிமுகப்படுத்துவதற்காக நாம் ஒன்றித்து செயற்படுகின்றோம்.

இறுதியாக,வழிகாட்டி, ஊக்கமளித்து ஒத்துழைப்புகளை வழங்கியமைக்காக விவசாய அமைச்சு, பொது திறைசேரி மற்றும் பணிப்பாளர் சபை ஆகியோருக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் நிறுவகத்திற்கு அதன் எதிர்காலச் செயற்பாடுகள் அனைத்தும் வெற்றி அடைய எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



தலைவர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர்

வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட

.

# சிரேஷ்ட முகாமையாளர்கள்



எச்.ஆர்.யூ.டீ. பண்டார
பொது முகாமையாளர்



யூ.எஸ்பீ.ஜீ.சூரியாரச்சி
பிரதிப் பொது முகாமையாளர்



ஜீ.ஏ.சந்ரதாச
உற்பத்தி முகாமையாளர்



டீ.ஜீ.யூ. சாமர
நிதி முகாமையாளர்



எஸ்.டீ.ரூபசிங்க
தொழில் முகாமையாளர்

# முகாமையாளர்கள்



கப்டன். கே.ஜீஆர்.பீ. கிரிஎல்ல
பாதுகாப்பு முகாமையாளர்



எம்.எம்.டீ.திலகரத்ன
உள்ளகக் கணக்காய்வாளர்



டீ.ஆர்.கே.திலகரத்ன
கணக்காளர்



ஆர்.ஏ.ஏ.பீ. ரணசிங்க
சந்தைப்படுத்தல் அதிகாரி



ஏஸ்.ஏ.அபேசிறி
வழங்கல் உத்தியோகத்தர்



எஸ்.எம்.ஏ.ஆர்.கே. மஞ்சநாயக
நிர்வாக உத்தியோகத்தர் (நிர்வாகம் மற்றும் மனிதவளம்)



டீ.ஆர்.குணரத்ன
ஆலை உத்தியோகத்தர்



ஆர்.எம்.மத்துமபண்டார,
வழங்கல் உத்தியோகத்தர்

# பணிப்பாளர்களின் அறிக்கை

வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் நிறுவனத்தின் (கம்பனி) பணிப்பாளர்கள் 2016 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளையும் 2016 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஆண்டறிக்கையையும் இத்துடன் சமர்ப்பிக்கின்றனர்.

## 1.0 கம்பனி பெயர்

வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் (பதிவு இல.பீபி 308)

## 2.0 அமைந்துள்ள இடமும் சட்ட அமைப்பும்

வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் நிறுவனம், அரச சுரங்கத்தொழில் மற்றும் கனிப் பொருட்கள் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் எப்பாவல பொஸ்பேட் செயற்திட்டத்தைப் பொறுப்பேற்பதற்கு பொதுக் கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசுடமையாக்கப்பட்ட வியாபாரத்தை 1987 இன் 23 ஆம் இலக்க பொதுக் கம்பனிகளாக மாற்றுவதன் மூலம் 1982 இன் 17ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டன.

எவ்வாறெனினும் பின்னர், இக்கம்பனி 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் மீள்பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 3.0 பிரதான நடவடிக்கைகளும் செயற்பாடுகளின் தன்மையும்

பல்லாண்டு விவசாயப் பயிரினங்களுக்காக பசளையாகப்பயன்படுத்தக்கூடிய பாறைப் பொஸ்பேட்களை அகழ்தல்,பதனிடல்,விற்பனை செய்வதுடன் தென்னம் பசளைகளைக் கலத்தல் என்பன கம்பனியின் பிரதான நடவடிக்கைகளாகும்.

## 4.0 நிதிக்கூற்று

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்று ஐந்தொகைத் திகதியில் நிறுவனம் தொடர்பான விவகாரங்களின் நிலைமையை உண்மையாகவும் நேர்மையாகவும் வெளிப்படுத்துகின்றன என்பதில் பணிப்பாளர்கள் திருப்தி அடைகின்றனர்.

இந்நிதிக்கூற்றுக்கள் தாயாரிப்பதில் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை பணிப்பாளர்கள் கருத்திற்கொண்டுள்ளதுடன் இக்கணக்கீட்டுக் கொள்கைகள் நிலைமாறா வகையில் பிரயோகிக்கப்பட்டிருந்த அதேவேளை அவற்றின் நியாயமான தன்மை,உண்மைத்தன்மை மற்றும் மதிப்பீடுகள் பரிசீலனை செய்யப்பட்டிருந்தன.
கணக்கீட்டுக் கொள்கைகளில் பொருண்மையான மாற்றங்கள் ஏற்படுத்தப்படவில்லை என்பது பணிப்பாளர்களின் அபிப்பிராயமாகும். நிறுவனத்தின் சொத்துக்களை பாதுகாத்தல் மற்றும் மோசடி அல்லதுமுறைகேடுகள் என்பனவற்றிலிருந்து தடுப்பதற்காக அவர்களின் பொறுப்பின் தேவைக்கான வழிமுறைகள் பணிப்பாளர்களால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

## 5.0 நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகள்

இந் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றமையை பணிப்பாளர்கள் கருத்திற்கொண்டமையை உறுதிசெய்வதுடன் அக் கணக்கீட்டுக் கொள்கைகள் நிலைமாறா வகையில் பிரயோகிக்கப்பட்டு வருகின்ற அதேவேளை அவை தொடர்பான நியாயமான மற்றும் உண்மைத் தன்மைகள் மதிப்பீடு செய்யப்பட்டு இதன் காரணமாக கொடுக்கல் வாங்கல்களின் உண்மைத்தன்மை சரியான முறையில் பிரதிபலிக்கின்றன. கணக்கீட்டு காலப்பகுதியில் எவ்விதமான மாற்றங்களும் கணக்கீட்டுக் கொள்ளைகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6.0 ஆதனம்,பொறி மற்றும் உபகரணம் அவற்றின் மதிப்பீடும் தேய்மானமும்

கம்பனியால் ஆண்டின் போது ஆதனம், பொறிமற்றும்உபகரணம் என்பவற்றிற்காக ரூபா 53,251,881.57மூலதன செலவினமாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும்உபகரணம் என்பவற்றின் நிலைப்பாடுகள், அவை தொடர்பான அசைவுகள், அவற்றின் மதிப்பீடுகள் மற்றும் தேய்மானம் தொடர்பான

விபரங்கள் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இல.10.0 இல் தரப்பட்டுள்ளன.

## 7.0 வரிகள்

மீளாய்வாண்டிற்காக வரி அறவிடத்தக்க வருமானத்தின் மீது 28%வரிப் பொறுப்பைக் கொண்டிருந்தது.

## 8.0 பங்கிலாபங்கள்

மீளாய்வாண்டிற்காக இடைக்காலப் பங்கிலாபம் எதுவும் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 9.0 கூறப்பட்ட மூலதனம்

கம்பனியின் கூட்டுமொத்தமான கூறப்பட்ட மூலதனமானரூபா72,510,000.00 தொகையில் 7,251,000 எண்ணிக்கையான சாதாரண பங்குகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. மீளாய்வாண்டின் போது கூறப்பட்ட மூலதனத்தில்எவ்வித மாற்றமும் இருக்கவில்லை.

## 10.0 பங்குகள்

பொதுக் கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசுடமையாக்கப்பட்ட வியாபாரத்தை 1987 இன் 23 ஆம் இலக்க பொதுக் கம்பனிகளாக மாற்றுதலின் 2(3) ஆம் பிரிவிற்கு அமைய அரசின் சார்பாக திறைசேரிச் செயலாளர் (அவரது அதிகாரப்பூர்வ நிலையில்)கம்பனியின் தனியான பங்குதாரராகக் காணப்படுகின்றார்.

2016 மார்ச் 31 இல் உள்ளவாறு கம்பனியின் பங்குதாரர்களின் விபரம் பின்வருமாறாகும்;

திறைசேரிச் செயலாளர் (அவரது அதிகாரப்பூர்வ நிலையில்)7,251,000 சாதாரண பங்குகள்.

வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் நிறுவனமானது GSMB டெக்னிக்கல் சேவிசஸ் (பிரைவேட்)லிமிடெட் நிறுவனத்தில் 100,000 சாதாரண பங்குகளை (ஒவ்வொன்றும் 10.00 பெறுமதியான) கொண்ட ஒரு பங்குதாரராகும்.

மேற்கூறித்த பங்குகள் மீதான நிறுவனத்தின் உரிமை16.66% ஐக் குறிக்கின்றது.

## 11.0 பங்குதாரர்களின் மாற்றம்

2016.03.31 இல் உள்ளவாறு கம்பனியின் பங்குதாரர்களில்

எவ்வித மாற்றமும் இடம் பெற்றிருக்கவில்லை.

## 12.0 கூட்டாண்மை சமூகப் பொறுப்பு

மீளாய்வாண்டின் போது கம்பனி அறக்கட்டளை நோக்கங்களுக்கும், கூட்டாண்மை சமூக பொறுப்புக்களுக்குமாக ரூபா 585,201.50 தொகையைப் பங்களிப்பு செய்திருந்தது.

## 13.0 தொழிலாளர்கள்

ஆண்டின் போது பதவியணியின் மொத்தக் கிரயம் ரூபா 236,020,214 ஆகக் காணப்பட்டது.

ஆண்டின் இறுதியில் உள்ளவாறு கம்பனியால் வேலைக்கு அமர்த்தப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 347 ஆகக்காணப்பட்டது.

## 14.0 பணிப்பாளர்கள்

மீளாய்வாண்டின் போது பின்வரும் பணிப்பாளர்கள் பதவி வகித்திருந்தனர்.

திரு. யூ. ஏ .திசாநாயக்க - தலைவர்

திரு.ஆர்.என்.கே. ரணவீர - நிறைவேற்றுப் பணிப்பாளர்

திருமதி. எஸ்.ஏ.சி குலதிலக - பணிப்பாளர்

திரு. ஏ.எம்.எம் பன்டா - பணிப்பாளர்

திரு. ஐ.எம். ஹெட்டியாரச்சி - பணிப்பாளர்

திரு. எம்.ஆர். ஞானதிலக - பணிப்பாளர்

திருமதி. பீ.எச் ஹன்துன்ஹேவா - பணிப்பாளர்

## 15.0 பணிப்பாளர்கள் கேட்டுவிலகலும் புதிதாக நியமிக்கப்படலும்

பணிப்பாளர்கள் எவரும் கேட்டுவிலகவோ அல்லது புதிதாக நியமிக்கப்பட்டோ இருக்கவில்லை.

## 16.0 பணிப்பாளர்களின் ஊதியம்

மீளாய்வாண்டின் போது பணிப்பாளர் ஊதியங்கள்,கட்டணங்கள் மற்றும் செலவினமாக ரூபா 4,111,754.19 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 17.0 நியதிச்சட்டக் கொடுப்பனவுகள்

பணிப்பாளர்கள், அவர்களின் சிறந்த அறிவிற்கும், நம்பிக்கைக்கும் அமைய ஊழியர் சேமலாபநிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும்அரசிற்கு உரித்தான நியதிச்சட்டக் கொடுப்பனவுகள் அனைத்தையும் முழுமையாகவும்

உரிய நேரத்திலும் செலுத்தப்பட்டிருந்தமை குறித்து திருப்தியடைகிறார்கள்.

## 18.0 இணக்கங்கள்

இலங்கை மற்றும்வேறு இடங்களில் நடைமுறையில் காணப்படும் சட்டங்கள் அல்லது பிரமாணங்களுக்கு முரணான நடவடிக்கைகள் எதிலும் கம்பனி ஈடுபட்டிருக்கவில்லை.

## 19.0 தொடர்ந்து இயங்கல்

கம்பனிஎதிர்வுகூறத்தக்க எதிர்காலத்திற்கு தொடர்ச்சியாக தொடர்ந்து இயங்குவதற்குத் தேவையான வளங்களைக் கொண்டுள்ளது என்பதில் பணிப்பாளர்கள் திருப்தியாக உள்ளனர். இதன் படி, கம்பனியின் சகல நிதிக்கூற்றுக்களும் கம்பனி தொடர்ந்து இயங்கும் என்ற அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

## 20.0 கூட்டாண்மை ஆளுகை

சிறந்த கூட்டாண்மை ஆளுகையை பணிப்பாளர் சபை உறுதி செய்கின்றது. நலன்பெறுனர்களின் நோக்கங்கள் மற்றும் எதிர்பார்ப்புகளுடன் ஓர் பொது வணிக முயற்சியாகவும் கம்பனியின் நோக்கங்களுக்கு இணங்கும் வகையில் செயற்பாடுகள் உள்ளன என்பதை உறுதி செய்வது பணிப்பாளர் சபையின் கடமையாகும்.

## 21.0 இடர் முகாமைத்துவம்

கம்பனி சட்ட இடர்களின் வெளிப்படுத்தலில் இருந்து நீக்கப்பட்டுள்ளமையை அல்லது குறைக்கப்பட்டுள்ளமையை உறுதிசெய்யும் பொருட்டு அதன் சட்டப்படியான மற்றும் சட்டத் தேவைகளைதிறன் உணர்வுடன் பூர்த்தி செய்துள்ளது.

## 22.0 கணக்காய்வாளர்கள்

கம்பனியின் கணக்காய்வாளர்களாக அரசாங்கக் கணக்காய்வாளர்கள் செயற்படுகின்றனர்.

கொழும்பு – 14, புதிய களனிப் பாலம் வீதி, இல. 73 1/1, இல் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் தலைமை அலுவலகத்தில் 2016 செப்தெம்பர் 28 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு இடம்பெற இருந்த வருடாந்த பொதுக் கூட்டத்தில் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தால் அமுலாக்கப்பட்ட நடைமுறைக்கு அமைவாக 2016/17 நிதி

ஆண்டிற்காக கம்பனியின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தை (அரசாங்கக் கணக்காய்வாளர்கள்) நியமிக்குமாறு பங்குதாரர்களுக்கு பரிந்துரை செய்வதற்காக வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் பணிப்பாளர்கள் தீர்மானித்திருந்தனர்.

புதிய கணக்காய்வாளர்களுக்கான ஊதியத்தை நிர்ணயிப்பதற்காக பணிப்பாளர்களுக்கு அங்கீகாரம் வழங்குவதைப் பரிந்துரைக்கும் ஓர் கூட்டத்தீர்மானம் வருடாந்த பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

மீளாய்வாண்டில்ரூபா 300,000 தொகை 2015/16 ஆம் ஆண்டிற்கான மொத்த கணக்காய்வுக் கட்டணங்களாகஅரசாங்கக் கணக்காய்வாளர்களுக்கு கம்பனியால் வழங்கப்பட்டிருந்தன. வரி ஆலோசனை தொடர்பான சேவைகளுக்காகமெஸர்ஸ் அமரசேகர என்ட் கம்பனிக்கு ரூபா 237,852 கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

தமது சுதந்திரத்தில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய வகையில் எவ்விதமான உறவுமுறைகளையும் கணக்காய்வாளர்கள் நிறுவனத்துடன் அல்லது அதன் துணை நிறுவனங்களுடன் பேணியருக்கவில்லை என்பதை பணிப்பாளர்கள் தமது அறிவுக்கெட்டிய வரை உறுதிப்படுத்துகின்றனர்.

பணிப்பாளர்கள் சபைக்காகவும் சார்பாகவும்



தலைவர்



பணிப்பாளர்




கம்பனி செயலாளர்கள்

# *கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு அறிக்கை*

**அங்கத்தவர்கள்**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு, பணிப்பாளர் சபையால் நியமிக்கப்பட்டுள்ளதுடன் இக்குழு சபைக்கு பொறுப்புடையதாகும். பொதுத் திறைசேரியால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் பணிப்பாளர், குழுவின் தலைவராவார். வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட்டின் அனைத்து நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களும் குழுவின் அங்கத்தவர்களாக செயற்படுகின்றனர். கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் ஓர் உத்தியோகத்தரும் வரிசை அமைச்சின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளரும் இக்குழுவில் கண்காணிப்பாளர்களாக செயற்படுகின்றனர்.

**கூட்டங்கள்**

குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படும் பிரச்சனைகளைக் கலந்தாலோசிப்பதற்காக ஆண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நான்கு தடவைகள் கூட்டப்பட்டிருந்தன. நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வாளரால் சமர்ப்பிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளும் தற்போது காணப்படுகின்ற கட்டுப்பாட்டு முறைமைகளும் பணிப்பாளர் சபைக்கு விதந்துரைகள் மேற்கொள்ளப்படுவதற்காக குழுவால் மீளாய்வு செய்து மதிப்பிடப்பட்டன.

**முடிவுரை**

அறிக்கைகளை விரிவாக ஆராய்ந்த பின்னர், கம்பனியின் கணக்கியல் கொள்கைகள், செயற்பாட்டுக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறைகள் தொடர்பான பிரச்சினைகளை நிவர்த்திசெய்வதற்காக முகாமைத்துவத்திற்கு குழு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது. மேலும், சில சிக்கலான விடயங்கள் பணிப்பாளர் சபையின் கவனத்திற்காகவும் தேவையான நடவடிக்கைகளுக்காகவும் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன.



தலைவர்
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு
வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட்

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No. ஜஎம்யூ/ஏ/எல்பிஎல்/எவ்ஏ/2016/1/42 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 2016 செப்தெம்பர் 26 |

வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேற் கம்பனியின் பங்குதாரர்களிற்கு

**வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேற் கம்பனியின் 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேற் கம்பனியின் ("கம்பனி") 2016 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

**நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை ("சபை") பொறுப்பாக உள்ளது.

**கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**அபிப்பிராயம்**

---

2016 மார்ச் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

---

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

- கணக்காய்விற்கு அவசியமானதும், இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுவதும், முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால்

வைத்திருக்கப்படுகின்றமை போன்ற எல்லா தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றிருக்கின்றேன் என்றும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்றும் ஆகும்.

**4. பராளுமன்றத்திற்கான அறிக்கை**

அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பட்டியல்படுத்தப்படும்

ஒப்பம்: எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட் நிறுவனம்**
**2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**
**விபரமான வருமானக் கூற்று**

| | குறிப்பு | **2015/2016** ரூபா | **2014/2015** ரூபா |
|---|---|---|---|
| வருமானம் | 5 | 562,734,795 | 530,430,994 |
| விற்பனைக் கிரயம் | | (319,223,189) | (250,027,971) |
| மொத்த இலாபம் | | 243,511,606 | 280,403,023 |
| ஏனைய வருமானம் | 6 | 37,783,451 | 41,993,334 |
| விநியோகச் செலவுகள் | | (3,396,237) | (12,366,891) |
| நிர்வாகச் செலவுகள் | | (217,005,254) | (192,170,979) |
| வரிக்கு முன்னைய இலாபம் | **7** | 60,893,567 | 117,858,487 |
| வரிச் செலவு | 8 | (34,307,032) | (17,769,522) |
| **ஆண்டிற்கான இலாபம்** | | 26,586,535 | 100,088,965 |
| **ஏனைய விபரமான வருமானம்** | | | |
| ஏற்பிசைவு செய்யப்பட்ட நலன் திட்டத்தின் மீதான உள்ளபடியான இலாபம் | | 2,991,618 | 1,084,179 |
| ஆண்டிற்கான ஏனைய விபரமான வருமானத்தின் மொத்தம் | | 2,991,618 | 1,084,179 |
| ஆண்டிற்கான விபரமான வருமானத்தின் மொத்தம் | | 29,578,152 | 101,173,144 |
| தலா ஒரு பங்கிற்கான ஈட்டல்கள் | 9 | 3.67 | 13.80 |

நிதிக்கூற்றுக்களின் 1 – 26 வரையான கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந் நிதிக்கூற்றுக்களின் ஓர் உள்ளார்ந்த பகுதியாகும்.

**வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட் நிறுவனம்**

**2016 மார்ச் 31 இல்**

**உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | 2016.03.31 | 2015.03.31 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | |
| ஆதன, பொறி, உபகரணம் | 10 | 337,918,703 | 380,078,567 |
| உரிமை மூலதன முதலீடுகள் | 11 | 1,000,000 | 1,000,000 |
| பிற்போடப்பட்ட வரி | | | |
| | | **338,918,703** | **381,078,567** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்புகள் | 12 | 126,596,959 | 83,731,306 |
| வியாபார பெறவேண்டியவைகள் | | 36,153,621 | 40,766,197 |
| வைப்புகள், முற்கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள் | 13 | 97,280,218 | 77,908,442 |
| குறுங்கால வைப்புகள் | 14 | 233,831,314 | 252,560,294 |
| காசும் காசிற்குச் சமனானவைகளும் | 15 | 27,669,774 | 8,200,063 |
| | | **521,531,886** | **463,166,302** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **860,450,589** | **844,244,868** |
| **உரிமை மூலதனமும் பொறுப்புகளும்** | | | |
| **மூலதனமும் ஒதுக்கங்களும்** | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 16 | 72,510,000 | 72,510,000 |
| பகிரப்படாத இலாபம் | | 687,804,839 | 688,226,686 |
| **மொத்த உரிமை மூலதனம்** | | **760,314,839** | **760,736,686** |
| **நடைமுறையல்லாப் பொறுப்புகள்** | | | |
| ஓய்வூதிய நலன் கடப்பாடுகள் | 17 | 29,712,137 | 31,508,910 |
| பிற்போடப்பட்ட வரி | 18 | 31,499,240 | 8,053,929 |
| | | 61,211,377 | 39,562,839 |

| | | | |
|---|---|---|---|
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| வியாபாரச் செலுத்த வேண்டியவைகள் | | 9,923,862 | 3,285,468 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 19 | 4,174,833 | 287,755 |
| ஏனைய செலுத்த வேண்டிய மற்றும் அட்டுறு செலவினங்கள் | 20 | 24,825,679 | 40,372,120 |
| வங்கி மேலதிகப்பற்றுகள் | | - | - |
| | | 38,924,374 | 43,945,343 |
| **மொத்த உரிமை மூலதனமும் பொறுப்புகளும்** | | | |
| | | 860,450,589 | 844,244,868 |

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக நான் உறுதிப்படுத்துகின்றேன்.

இந் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் சமர்ப்பிப்பதற்குமான பொறுப்பு பணிப்பாளர் சபையினதாகும்.

**நிதி முகாமையாளர்**

சபையின் சார்பாக அங்கீகரித்து கைச்சாத்திடப்பட்டுள்ளது.

**பணிப்பாளர்** **பணிப்பாளர்**

திகதி : 2016 செப்தெம்பர் 01

நிதிக் கூற்றுக்களின் 1 – 26 வரையான கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந் நிதிக்கூற்றுக்களின் ஓர் உள்ளார்ந்த பகுதியாகும்.

**வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட் நிறுவனம்**

**2016 மார்ச் 31 இல் உள்ளவாறான உரிமை மூலதன மாற்றக்கூற்று**

| | கூறப்பட்ட மூலதனம் | பகிரப்படாத வருமானம் | மொத்த உரிமை மூலதனம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| **2014.04.01 இல் உள்ளவாறான மீதி -** | 72,510,000 | 622,053,543 | 694,563,543 |
| ஆண்டிற்கான இலாபம் | - | 100,088,965 | 100,088,965 |
| **ஏனைய விபரமான வருமானம்** | | | |
| ஏற்பிசைவு செய்யப்பட்ட நலன் திட்டத்தின் மீதான உள்ளபடியான இலாபம்/ (நட்டம்) | - | 1.084,179 | 1,084,179 |
| **உரிமைப் பங்குதாரர்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்** | | | |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | - | (35,000,000) | (35,000,000) |
| 2015.03.31 இல் உள்ளவாறான மீதி | 72,510,000 | 688,226,687 | 760,736,687 |
| ஆண்டிற்கான இலாபம் | | 26,586,535 | 26,586,535 |
| **ஏனைய விபரமான வருமானம்** | | | |
| ஏற்பிசைவு செய்யப்பட்ட நலன் திட்டத்தின் மீதான உள்ளபடியான இலாபம்/ (நட்டம்) | | 2,991,618 | 2,991,618 |
| **உரிமைப் பங்குதாரர்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்** | | | |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | | (30,000,000) | (30,000,000) |
| 2016.03.31 இல் உள்ளவாறான மீதி | 72,510,000 | 687,804,839 | 760,314,839 |

நிதிக்கூற்றுக்களின் 1 – 26 வரையான கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந் நிதிக்கூற்றுக்களின் ஓர் உள்ளார்ந்த பகுதியாகும்.

## வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட் நிறுவனம்

## 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சற் கூற்று

| | *(குறிப்பு)* | **2016.03.31** | **2015.03.31** |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | | |
| வரிக்கு முன்னரான இலாபம் | | 60,893,567 | 117,858,487 |
| **சீராக்கங்கள்** | | | |
| பெறுமானத் தேய்வு | | 29,757,670 | 24,317,754 |
| ஓய்வூதிய நலக் கடப்பாடுகள் | | 5,980,956 | 4,566,291 |
| வட்டி வருமானம் | | (36,526,936) | (41,231,730) |
| பங்கிலாப வருமானம் | | (200,000) | (600,000) |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்** | | **59,905,256** | **104,910,802** |
| **தொழிற்படு மூலதன மாற்றங்கள்** | | | |
| இருப்புகள் (அதிகரிப்பு).̇.குறைவு | | (42,865,653) | (19,782,852) |
| வியாபார பெறவேண்டியவைகள் (அதிகரிப்பு)/குறைவு | | 4,777,584 | 1,104,934 |
| வைப்புகள், முற்பணங்கள் மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள் (அதிகரிப்பு)/குறைவு | | (19,536,784) | (11,657,222) |
| வியாபார செலுத்த வேண்டியவைகள் (அதிகரிப்பு)/குறைவு | | 6,638,394 | 2,268,698 |
| ஏனைய செலுத்த வேண்டியவைகள் மற்றும் அட்டுறு செலவினங்கள் (அதிகரிப்பு)/குறைவு | | (15,546,443) | 8,222,978 |

| | | | |
|---|---|---|---|
| **செயற்பாடுகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சல்** | | **(6,627,647)** | **85,067,337** |
| செலுத்தியவருமான வரி/ஈஎஸ்சீ/பிடித்து வைத்தல் வரி | | (6,974,642) | (18,774,994) |
| ஓய்வூதிய நலக் கடப்பாடுகளின் கொடுப்பனவு | | (4,786,110) | (1,036,180) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | | **(18,388,398)** | **65,256,163** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | | (44,068,086) | (121,097,086) |
| மூலதன நடைமுறை வேலையிலான அதிகரிப்பு | | 56,470,280 | (48,625,071) |
| குறுங்கால வைப்புகளிலான அதிகரிப்பு | | 18,728,980 | 92,789,333 |
| பெற்ற வட்டி | | 36,526,936 | 41,231,730 |
| பெற்ற பங்கிலாபம் | | 200,000 | 600,000 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | | **67,858,110** | **(35,101,093)** |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | | |
| செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள் | | (30,000,000) | (35,000,000) |
| **நிதி நடவடிக்கைகளில் இருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | | **(30,000,000)** | **(35,000,000)** |
| **ஆண்டின் போதான காசு மற்றும் காசிற்குச் சமமானவைகளிலான தேறிய மாற்றங்கள்** | | **19,469,712** | **(4,844,930)** |
| ஆண்டின் ஆரம்பத்தில்லான காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் | 21.1 | 8,200,063 | 13,044,993 |
| ஆண்டின் இறுதியிலான காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் | **21.2** | **27,669,774** | **8,200,063** |

நிதிக்கூற்றுக்களின் 1 – 26 வரையான கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந் நிதிக்கூற்றுக்களின் ஓர் உள்ளார்ந்த பகுதியாகும்.

# குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள்

## 1. கூட்டுத்தகவல்கள்

### 1.1 பொது

வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் (கம்பனி) அரச சுரங்க மற்றும் கனிப்பொருள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் எப்பாவல பொஸ்பேட் செயற்திட்டத்தை பொறுப்பேற்பதற்காக 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க பொதுக் கூட்டுத்தாபனங்களை அல்லது அரசுடமையாக்கப்பட்ட வியாபாரப் பொறுப்பு முயற்சிகளைப் பொதுக் கம்பனிகளாக மாற்றும் சட்டத்தின் நியதிகளுக்கு அமைய 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றாக கூட்டிணைக்கப்பட்டு பின்னர் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் மீள பதிவு செய்யப்பட்டுள்ளது.

கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 73/1/1புதிய களனி பாலம் வீதி,கொழும்பு-14 என்ற முகவரியில் அமைந்துள்ளதுடன் ரொக் பொஸ்பேட் (Apatite) டிப்போசிட் எப்பாவலயில் அமைந்துள்ளது.

### 1.2 பிரதான நடவடிக்கைகளும் செயற்பாடுகளின் தன்மையும்

நீண்ட கால விவசாயப் பயிரினங்களின் பசளையாக பயன்படுத்தக் கூடிய பாறைப் பொஸ்பேட்களை அகழ்தல்,பதனிடல்,விற்பனை செய்தல் என்பன கம்பனியின் பிரதான நடவடிக்கைகளாகும். இதற்கு மேலதிகமாக, கம்பனி 2014 இல் வாரியபொல, கனத்தவெவவில் பசளைகளின் கலப்புச் செயற்பாட்டையும் ஆரம்பித்திருந்தது.

### 1.3 வழங்கலுக்காக அனுமதிக்கப்பட்ட திகதி

2016 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர் சபையால் 2016 செப்தெம்பர் 01 ஆம் திகதி வழங்கப்படுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

## 2. தயாரிக்கப்பட்ட அடிப்படைகள்

### 2.1 இணக்கக் கூற்று

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் தேவைப்பாடுகளிற்கு இணங்கவும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட (எல்கேஎஸ் மற்றும் எஸ்எல்எப்ஆர்எஸ்) இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு அமைய (நிதிநிலைமைக் கூற்று, விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புகளுடன்) கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.2 அடிப்படை அளவீடுகள்

நிதிநிலைமைக் கூற்றின் பின்வரும் முக்கிய விடயங்கள் தவிர்ந்த ஏனைய விடயங்கள் வரலாற்றுக்கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளனண:

- விற்பனைக்கென காணப்படும் நிதிச்சொத்துக்கள் அவற்றின் நியாய விலையில் மதிப்பிடப்பட்டுள்ளன.

- குறித்துரைக்கப்பட்ட நலன் கடப்பாட்டின் பொறுப்பு, குறித்துரைக்கப்பட்ட நலன் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளன.

- கம்பனிக்கு வருமானத்தை ஈட்டித்தரும் பொஸ்பேட் படிவு சொத்துக்களின் பெறுமதி நம்பகரமான முறையில் அளவிடப்பட முடியாததன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஓர் சொத்தாக ஏற்பிசைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3 செயற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயம்

நிதிக்கூற்றுக்கள், கம்பனியின் செயற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயமான இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. குறிப்பிடப்பட்டிருந்தால் அன்றி சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து நிதித்தகவல்களும் கிட்டிய ரூபாவிற்கு முழுமைப்படுத்தப்பட்டுள்ளன.

## 2.4 கூட்டிணைப்புத் தகவல்கள்

நிதிக்கூற்றுக்களின் வெளிப்படுத்தல் - இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS 01) இல.01 இற்கு அமைய கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்ச்சியாக கம்பனியால் பின்பற்றப்பட்டு வரப்பட்டுள்ளன.

## 2.5 முக்கியத்துவம் மற்றும் திரட்டல்கள்

நிதிக்கூற்றுக்களின் வெளிப்படுத்தல் - இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS 01) இல.01 இற்கு இணங்க, ஒரே தன்மையினதான பொருண்மையான வகுப்புக்கள் தனித்தனியாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ஒத்த தன்மையற்ற விடயங்களும் அவை வேறாக பொருண்மையானதாயின் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

சட்டரீதியான அங்கீகாரம் காணப்படுகின்ற வேளையிலும் தேறிய அடிப்படையில் தீர்க்கப்படுவதற்கு அல்லது சொத்துக்களை விற்பனை செய்து உடனடியாகவே பொறுப்பைத் தீர்ப்பதற்கான ஓர் நோக்கம் இருப்பினும்மாத்திரமே நிதிச் சொத்துக்களும் நிதிப் பொறுப்புக்களும் ஒன்றிலிருந்து மற்றொன்று கழிக்கப்பட்டு தேறிய பெறுமதிகள் நிதிநிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ளன. கணக்கீட்டு நியமங்கள் அல்லது விதப்புரைகள் மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளில் குறிப்பாக வெளிப்படுத்தப்பட்டிருந்தால் அன்றி வருமானங்களும் செலவினங்களும் வருமானக்கூற்றில் ஒன்றிலிருந்து ஒன்று கழிக்கப்படுவதில்லை.

# 3. குறிப்பிடத்தக்க கணக்கியல் தீர்ப்புகள்,மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள்

நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதில் எதிர்காலம் தொடர்பான சில முக்கிய கணக்கீட்டு ஊகங்களின் பிரயோகம் தேவைப்படுகின்றது. மேலும், அறிக்கைக் காலப்பகுதியின் இறுதியில் வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மற்றும் நிகழத்தக்க பொறுப்புகளின் வெளிப்பாடுகளின் தாக்கங்கள் குறித்து தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை கம்பனியின் முகாமைத்துவத்தால்மேற்கொள்வதற்கு வேண்டப்படுகின்றது.எனினும் இத்தகைய மதிப்பீடுகள்,ஊகங்கள் என்பவை குறித்த நிலையற்ற தன்மை எதிர்கால சொத்துக்கள்,பொறுப்புக்களின் கொண்டு செல்லல் தொகைக்கான ஓர்

பொருண்மையான சீராக்கத் தேவைப்பாட்டை விளைவிக்கக் கூடியது. எனவே, உண்மையான அனுபவமும் விளைவுகளும் தீர்வுகளில் இருந்தும் மதிப்பீடுகளிலிருந்தும் வேறுபடக்கூடும்.

கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிக்கும் நடைமுறையில் நிதிக்கூற்றுக்களின் தொகையில் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பின்வரும் தீர்ப்புக்கள்,மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை முகாமைத்துவம் மேற்கொண்டிருந்தது.

## (அ) வரி

கம்பனி,வருமான வரி மற்றும் ஏனைய வரிகளுக்கு உட்பட்டது. வரிகளின் விதிப்பு நோக்கத்திற்காக வரிக்குட்பட்ட இலாபம் மற்றும் நிதிக்கூற்றுக்களில் எஸ்எல்எப்ஆர்எஸ் இன் கையாள்கையின் காரணமாக வரி வழிகாட்டல்களின் சிக்கல், நடைமுறையாண்டு,பிற்போட்ட வரி மற்றும் ஏனைய நிலுவை வரிகளிற்கான மொத்த ஏற்பாட்டை நிர்ணயிப்பதற்காக முக்கியமான தீர்மானங்கள் தேவைப்பட்டன. இந்நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பின் போது வரிச்சட்டங்களின் பிரயோகங்களின் விளக்கங்களில் நிச்சயமற்ற தன்மைகள் நிலவின.

மேலதிக வரிகளின் நிலுவைகளின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டே நடைமுறையாண்டு, பிற்போடப்பட்ட மற்றும் ஏனைய வரிகளுக்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை கம்பனி ஏற்பிசைவு செய்துள்ளது. ஆரம்பத்தில் பதிவு செய்யப்பட்ட தொகைகளிலிருந்தும் இறுதி வரியின் விளைவு வேறுபடுகையில் அத்தகைய வேறுபாடுகள் நிர்ணயங்கள் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியின் போதான வருமானம், பிற்போடப்பட்டவை மற்றும் வரித் தொகைகளைத் தாக்குகின்றன.

## (ஆ) ஆதனம் மற்றும் உபகரணங்களின் பயன்படு ஆயுட்காலம்

கம்பனி ஒவ்வொரு அறிக்கைத் திகதியில் உள்ளவாறான சொத்துக்களின் பெறுமானத்தேய்வின் இறுதி நிலைப்பெறுமதி,பயன்பாட்டு ஆயுட்காலம் மற்றும் சொத்துக்களின் பெறுமானத்தேய்வு முறைகளை மீளாய்வு செய்கின்றது. முகாமைத்துவத்தின் தீர்மானம் இப் பெறுமதியிடல்கள், வீதங்கள், முறைகளின் மதிப்பீட்டில் பிரயோகிக்கப்படுவதால் அவை நிச்சயமற்ற தன்மைக்கு உட்படுகின்றன.

## (இ) தொடர்ந்து இயங்கும் தன்மை

கம்பனி தொடர்ந்து இயங்கக்கூடிய தன்மையினதாக பணிப்பாளர்கள் ஓர் மதிப்பீட்டை மேற்கொண்டு எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்திற்காக வியாபாரத்தைத் தொடரக்கூடிய அளவிற்கு மூலவளங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளதாக திருப்திகொண்டுள்ளது. மேலும் கம்பனி தொடர்ந்து இயங்கும் திறனை பாதிக்கக்கூடிய முக்கியமான நிச்சயமற்ற தன்மைகள் பற்றி பணிப்பாளர்கள் சபை அறியவில்லை. கம்பனிக்கு, கலைப்பதற்கான அல்லது செயற்பாடுகளை முடிவுறுத்துவதற்கான நோக்கம் இல்லை. ஆகவே நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்து இயங்கும் அடிப்படையில் தொடர்ந்து தயாரிக்கப்படுகின்றன.

## (ஈ) ஐந்தொகைக்குப் பின்னைய நிகழ்வு

2016 யூன் 21 ஆம் திகதி எப்பாவல வேலைத் தளத்தில் ஓர் தீ விபத்து ஏற்பட்டிருந்தது. கம்பனிக்கு ஏற்பட்ட மதிப்பீட்டு நட்டம் ஏறத்தாழ 6.9 மில்லியன் தொகையாகும். எவ்வாறெனினும், தீ ஏற்படும் வேளையில் சொத்துக்கள் முழுமையாகக் காப்புறுதி செய்யப்பட்டிருந்தன.

## (உ) நிதிசொத்துக்கள் மீதான சேத இழப்புக்கள்

விபரமான வருமானக்கூற்றில் சேத இழப்புகள் ஏதேனும் பதியப்பட வேண்டுமா என்பது குறித்து பொருண்மையான ஆதாரங்கள் ஏதேனும் உள்ளதா என்பதைக் கண்டறிவதற்காக ஒவ்வொரு அறிக்கைத் திகதியிலும் அல்லது அடிக்கடி கம்பனி மதிப்பீடுகளை மேற்கொண்டு வருகின்றது.

## (ஊ) விற்பனைக்கு தயாராக உள்ள முதலீடுகளின் பெறுமதியில் ஏற்பட்ட இழப்புகள்

விற்பனைக்கென வகைப்படுத்தப்பட்ட பங்கு அறக்கட்டளை முதலீட்டிற்காக வழங்கப்பட்ட கடன் பெறுமதியை ஒவ்வொரு அறிக்கைத் திகதியின் போதும் அவை இழப்பிற்கு உள்ளாகியுள்ளனவா என கம்பனி மதிப்பீடு செய்கின்றது. கடன்கள் மற்றும் முற்பணங்களின் தனியான மதிப்பீடுகளில் பிரயோகிக்கப்பட்ட அதே விதமான தீர்வுகளும் இதன் போது தேவைப்படுகின்றன.

## (எ) பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள்

கழிக்கப்படக்கூடிய தற்காலிக வேறுபாடுகள், வரி இழப்புகள் மற்றும் வரிக் கழிவுகள் பயன்படுத்தப்படாது இவ் இழப்புகள்/கழிவுகள் வரிக்குட்படக் கூடிய வருமானத்தின் அளவிற்கு பயன்படுத்தப்படக்கூடியதற்கு எதிராக பயன்படுத்தப்படுவதற்குள்ள வரையிலான வரி இழப்புகள் மற்றும் வரிக் கழிவுகளுக்காக உள்ளது. எதிர்கால வரித் திட்ட தந்திரோபாயங்களுடன் எதிர்கால வரிக்குட்படக்கூடிய இலாபங்களின் நேரத்தையும் நிலையையும் அடிப்படையாகக் கொண்டு ஏற்பிசைவு செய்யக்கூடிய பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் தொகை நிர்ணயிப்பதற்கு முக்கிய முகாமைத்துவ தீர்வுகள் தேவைப்படுகின்றன.

## (ஏ) அங்கீகரிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டங்கள்

காப்பீட்டு எதிர்வுகூறல்களைக் கருத்திற்கொண்டு ஓர் சமன்பாட்டைப் பயன்படுத்தி விதந்துரைக்கப்பட்ட நலன் திட்டங்களின் கொண்டுசெல்லல் பெறுமதி நிர்ணயிக்கப்படுகின்றது. எதிர்கால கணிப்பீட்டின் போது உள்ளபடியான விருத்திகளில் இருந்து வேறுபடக் கூடிய பல்வேறு ஊகங்களை இவை ஈடுபடுத்தி உள்ளன. இவை கழிவு வீதம்,எதிர்கால சம்பள உயர்வு மற்றும் இறப்பு வீதம் என்பவற்றை நிர்ணயிப்பையும் உள்ளடக்கியுள்ளன. கணிப்பீட்டின் சிக்கல் நிலை, முக்கிய மறைபொருளாக உள்ள எதிர்வுகூறல்கள் மற்றும் அவற்றின் நீண்ட கால தன்மைகள் காரணமாக விதந்துரைக்கப்பட்ட நலன் திட்டங்கள் இவ் எதிர்வுகூறல்களின் மாற்றங்களிற்கு உட்படுவதற்கு உயர் உணர்திறன் மிக்கவையாகும். ஒவ்வொரு அறிக்கை திகதியிலும் சகல எதிர்வுகூறல்களும் மீள் பரிசீலனை செய்யப்படுகின்றன.

இலங்கை திறைசேரி முறிகளின் விளைவை எதிர்பார்க்கப்படும் விதந்துரைக்கப்பட்ட நலன் கடப்பாடுகள் வரையில் முகாமைத்துவம் கருத்திற்கொண்டு துல்லியமான கழிவு வீதம் கணிப்பிடப்படுகின்றது. மேலும், எதிர்கால பணவீக்க வீதம் மற்றும் எதிர்பார்க்கப்படும் கம்பனியின் எதிர்கால சம்பள உயர்வு வீதத்தை எதிர்கால சம்பள உயர்வுகள் அடிப்படையாகக் கொண்டன.

## 4. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

கம்பனியால் இந் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் பயன்படுத்தப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே தரப்பட்டுள்ளன. கீழே தரப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் குறிப்பிடப்பட்டால் அன்றி தொடர்ந்து அனைத்துக் காலப் பகுதியின் போதும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன.

### 4.1 வருமான ஏற்பிசைவு

### 4.1.1 பொருட்களின் விற்பனை

பொருட்களின் விற்பனை தொடர்பான பொருளாதார நன்மைகள் கம்பனிக்கு கிடைக்கக்கூடியதாகக் காணப்படுகின்ற போதும் வருமானம் மற்றும் அவை தொடர்பான கிரயங்களும் நம்பகரமான அடிப்படையில் கணிப்பிடக்கூடியதாக உள்ள போது பொருட்களின் விற்பனை வருமானம் கணக்குகளில் பதிவு செய்யப்படுகின்றன.

பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தியாக்கப்படும் சந்தர்ப்பங்களில் பொருட்களின் விற்பனை மூலம் பெறப்படும் வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றது:

அ) குறிப்பிடத்தக்க இடர்களையும் பொருட்கள் மீதான உரிமையையும் கொள்வனவாளருக்கு கம்பனி மாற்றியுள்ளது.

ஆ) பொருட்கள் மீதான பொதுவான உரிமை அல்லது பொருட்கள் மீதான ஒரு பயனுறுதிவாய்ந்த கட்டுப்பாடு போன்ற எதனையும் கம்பனி கொண்டிருக்கவில்லை.

இ) வருமானத் தொகை நம்பகரமான முறையில் அளவிட முடிவதுடன் கொடுக்கல்வாங்கல் தொடர்பான பொருளாதார நன்மைகள் கம்பனிக்குக் கிடைக்கக்கூடியதாகக் காணப்படுகின்றது. அத்துடன்

ஈ) கொடுக்கல்வாங்கல் தொடர்பாக ஏற்கப்பட்ட அல்லது ஏற்கப்பட உள்ள கிரயங்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்பட முடியும்.

### 4.1.2 வட்டி வருமானம்

வட்டி வருமானம் EIR (Effective Interest Rate) செயற்திறன் வட்டி விகித முறையை பயன்படுத்தி ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளது.

### 4.1.3 பங்கிலாப வருமானம்

கம்பனியால் பங்கிலாபம் பெறப்படுவதற்கு உரித்தான வேளை முதல் அட்டுறு அடிப்படையில் விபரமான வருமானக்கூற்றில் பங்கிலாப வருமானம் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

### 4.1.4 ஏனைய வருமானங்கள்

ஏனைய வருமானங்கள் அட்டுறு அடிப்படையில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளன.

## 4.2 செலவின ஏற்பிசைவு

வருமானங்கள் மற்றும் அவற்றை ஈட்டுவதற்கான கிரயத்திற்கும் குறித்த பொருளின் வருமானத்தின் உழைப்பிற்கும் இடையிலான நேரடி பிணைப்பின் அடிப்படையில் வருமானக்கூற்றில் செலவினங்கள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. வியாபாரத்தைத் தொடர்ந்து இயக்குவதற்கும் ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் பொறிகளின் வினைத்திறனான பராமரிப்பிற்காக ஏற்கப்படும் சகல செலவினங்களும் விபரமான வருமானக் கூற்றில் பதியப்பட்டுள்ளன.

கம்பனியின் செயற்பாட்டுகள் நியாயமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன எனும் அடிப்படையில் வருமானக்கூற்றின் வெளிப்படுத்தல் நோக்கத்திற்காக "செலவினங்களின் செயற்பாடு"முறை பிரயோகிக்கப்பட்டுள்ளன.

வருமான வரிச் செலவினங்கள் நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரி என்பவற்றை உள்ளடக்கியுள்ளன. வருமான வரிச் செலவினங்கள் ˙ விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளன.

## 4.3 வரிகள்

### 4.3.1 நடைமுறை வரிகள்

நடைமுறை ஆண்டில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறவிடப்படுவதற்கு அல்லது செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் மற்றும் முன்னைய ஆண்டுகளின் செலுத்தவேண்டிய வரி தொடர்பாக ஏதேனும்

சீராக்கங்கள் இருப்பின் அவையும் வரிச்சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 4.3.2 பிற்போடப்பட்ட வரி

நிதி அறிக்கையிடல் நோக்கிற்காக சொத்து,பொறுப்புக்களாகக் கொண்டுசெல்லப்படும் தொகைக்கும் வரி விதித்தல் நோக்கங்களாக பயன்படுத்தப்படும் தொகைகளுக்கும் இடையிலான தற்காலிக வேறுபாடுகளின் மீது பொறுப்புக்களை பயன்படுத்தி பிற்போடப்பட்ட வரி ஏற்பாடு செய்யப்படுகின்றது.
பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் கழிக்கப்படக்கூடிய வேறுபாடுகள் அனைத்திற்குமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. பயன்படுத்தப்படாத வரிக் கழிவுகளும் பயன்படுத்தப்படாத வரி இழப்புகளின் முன் கொண்டு செல்லல்களும், அவற்றின் கழிக்கப்படக் கூடிய தற்காலிக வேறுபாடுகளிற்கு எதிராக கிடைக்கப்பெறும் வரிக்குட்படும் இலாபத்தின் அளவு வரை பயன்படுத்தப்பட முடியும்.

பயன்படுத்தப்படுவதற்குள்ள பிற்போடப்பட்ட வரிச் சொத்தின் ஒரு பகுதி அல்லது முழுதையும் அனுமதிப்பதற்கு போதிய வரிக்கு உட்படத்தக்க இலாபம் இல்லாத போது அது வரைக்கும் ஒவ்வொரு அறிக்கைத் திகதியின் போதும் ஓர் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் கொண்டுசெல்லல் தொகை மீளாய்வு செய்யப்பட்டு குறைக்கப்படுகின்றது. ஏற்பிசைவு செய்யப்படாத பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஒவ்வொரு நிதி நிலைமைக் கூற்றுத் திகதியின் போதும் மீள மதிப்பிடப்பட்டு அறவிடப்படுவதற்குள்ள பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் அனுமதிக்கும் எதிர்கால வரிக்கு உட்படக் கூடிய இலாபம் வரையில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

அறிக்கைத் திகதியில் பின்னர் அமுலாக்கப்பட்ட அல்லது அமுலில் உள்ள வரி வீதங்கள் மற்றும் வரிச் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களும் பொறுப்புகளும் சொத்துக்கள் தேறப்படும் போதும் பொறுப்புகள் தீர்க்கப்பட்ட ஆண்டில் பிரயோகிக்கப்பட்ட வரி வீதத்தில் அளவிடப்படுகின்றன.

## 4.4 நிதியல்லாச்சொத்து

### 4.4.1 ஆதனம் மற்றும் உபகரணம்

#### அங்கீகாரம் மற்றும் அளவீடு

இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS-16 ஆதனம், இயந்திரம் மற்றும் உபகரணங்களிற்கமைய சொத்தின் கிரயம் நம்பகரமான முறையில் அளவிடப்பட்டு சொத்துக்களின் எதிர்கால பொருளாதார நலன்கள் நிறுவகத்திற்குள் பாய்ச்சப்படும் வகையில் இருப்பின் ஆதனம், இயந்திரம் மற்றும் உபகரணங்கள் ஏற்பிசைவு செய்யப்படும். ஆரம்பத்தில் ஆதனங்களும் உபகரணங்களும் கிரயத்தில் அளவிடப்படுகின்றன.

#### கிரய வடிவம்

ஆதனம் மற்றும் உபகரணங்கள் அவற்றின் நாளாந்த பராமரிப்பு செலவினங்கள் தவிரந்த திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் திரண்ட சேத இழப்பு பெறுமதி கழிக்கப்பட்டு கிரயத்தில் பதியப்பட்டுள்ளது. ஏற்பிசைவு செய்யப்பட்ட படிமுறைகள் எதிர்நோக்கப்பட்டு கிரயங்கள் ஏற்கப்பட்டிருப்பின் அத்தகைய கிரயம் உபகரணத்தின் பரிமாற்றப்பட்ட பகுதிக் கிரயத்தையும் உள்ளடக்கின்றது.

#### பின்னர் ஏற்பட்ட செலவினங்கள்

வியாபாரத்தினை முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் அல்லது வியாபாரத்தில் வருமானம் ஈட்டும் திறனை அதிகரிக்கும் நோக்கில் நிரந்தரமாக மேற்கொள்ளப்படுகின்ற சொத்துக் கொள்வனவு அபிவிருத்தி செய்தல் அல்லது முன்னேற்றும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட பின்னைய செலவினங்கள் மூலதனச் செலவினங்களாகும். அவை ஓர் சொத்தின் கொண்டு செல்லல் தொகையாகும். நாளாந்தம் ஆதனங்கள் மற்றும் உபகரணங்களின் பராமரிப்பிற்காக மேற்கொள்ளப்படும் கிரயங்கள் அவை உறப்பட்டவையாக விபரமான வருமான கூற்றில் காட்டப்பட்டுள்ளன.

#### பெறுமானத்தேய்வு

மதிப்பிடப்பட்ட பயன்தரு வாழ்க்கைக் காலங்களிற்கு இடையே அவற்றின் இறுதிப் பெறுமதியில் ஆதனங்கள் மற்றும் உபகரணங்களின் கிரயம் நேர்கோட்டு முறையைப் பயன்படுத்தி பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்டு கழித்துக் காட்டப்படுகின்றது. பெறுமானத்தேய்வு கொள்வனவு செய்யப்பட்ட திகதியில்

இருந்து அதன் விற்பனை திகதி வரை விகிதாசார அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது. காணி பெறுமானத்தேய்விடப்படுவதில்லை.

| **சொத்து வகைகள்** | **பெறுமானத்தேய்வு (%)** |
|---|---|
| கட்டிடம் | 4 |
| காணியில் ஏற்பட்ட முன்னேற்றம் | 10 |
| பொறித்தொகுதி மற்றும் இயந்திரங்கள் | 10 |
| ஆய்வுக்கூட உபகரணங்கள் | 10 |
| மின்சார உபகரணங்கள் | 10 |
| நானாவித சொத்துக்கள் | 10 |
| மோட்டார் வாகனம் | 20 |
| அலுவலக உபகரணம் | 20 |
| தளபாடங்களும் பொருத்துக்களும் | 20 |
| கணனி வன்பொருளும் மென்பொருளும் | 20 |

சொத்துக்களின் எஞ்சிய பெறுமதி,அதன் பயன்தரு ஆயுட்காலம் மற்றும் பெறுமானத்தேய்வு முறைகள் ஒவ்வொரு நிதி ஆண்டின் இறுதியிலும் பொருத்தமாயின் மீளாய்வு செய்யப்பட்டு சீராக்கப்படுகின்றன.

### குறை ஏற்பிசைவு

ஆதனம் மற்றும் உபகரணங்கள் என்பனவற்றின் எதிர்கால பொருளாதார பயன்கள் அல்லாத போது அல்லது விற்பனைக்கென வகைப்படுத்தப்படும் போது அவை குறை ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. சொத்துக்களின் குறை ஏற்பிசைவால் ஏற்படும் ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் (தேறிய விற்பனை வருவாய்க்கும் அச்சொத்துக்களின் முன் கொண்டுவந்த பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடு) சொத்து குறை ஏற்பிசைவு செய்யப்பட்ட ஆண்டின் விபரமான வருமானக்கூற்றில் ஏனைய தொழிற்பாட்டு வருமானத்தில் வெளிக்காட்டப்படும்

## 4.4.2 நிதி அல்லாச்சொத்துக்களின் பெறுமதி இழப்பு

ஒவ்வொரு அறிக்கைத் திகதியிலும் ஓர் சொத்தின் பெறுமதியில் வீழ்ச்சிகள் காணப்படுவதற்கான அறிகுறிகள் உள்ளனவா என கம்பனி மதிப்பிடுகின்றது.

ஏதேனும் அறிகுறிகள் காணப்படின் அல்லது ஓர் சொத்திற்காக வருடாந்த பெறுமதி இழப்பிற்கு உரிய பரிசோதனை தேவைப்படுகையில் கம்பனி சொத்துக்களின் பெறவேண்டிய தொகையை மதிப்பிடுகின்றது.

## 4.5 செயற்பாட்டு குத்தகை

குத்தகை காலத்தின் போது சொத்து தொடர்பாக பெருமளவில் சகல இடர்களும் உரிமையும் குத்தகை கொடுனரிடம் உள்ள போது அக் குத்தகை செயற்பாட்டுக் குத்தகை என வகைப்படுத்தப்படும். செயற்பாட்டுக் குத்தகைக் கொடுப்பனவுகள்அல்லது குத்தகையிடப்பட்ட சொத்து நுகரப்படுவதிலிருந்தான பொருளாதார நலன்களின் காலத்திற்கமைய நேர்க்கோட்டு முறைக்கமைய செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

## 4.6 இருப்புக்கள்

இருப்புகள், கிரயம் அல்லது தேறிய கைக்கெட்டும் பெறுமதி ஆகியவற்றில் குறைவானதில் வெளிப்படுத்தப்படுகின்றன. உற்பத்திச் செலவை அடிப்படையாகக் கொண்டு நிறையிடற் சராசரி என்ற அடிப்படையில் கிரயம் நிர்ணயிக்கப்படுகின்றது. பொஸ்பேட் இருப்புக்களை மதிப்பிடும் போது பொஸ்பேட் சுரங்க கிரயத்திலுருந்து 40%பெறுமானத்தை “துண்டாக்கப்பட்ட”உற்பத்தி (பதனிடப்படாத) பொருட்டு ஒதுக்குதல் அத்துடன் எஞ்சிய 60%பெறுமானத்தை “அரைக்கப்பட்ட”உற்பத்திக்காக (பதனிடப்பட்ட) ஒதுக்கப்படுவது வழமையாகும். தேறிய தேறத்தக்க பெறுமதி என்பது சாதாரண வியாபார நடவடிக்கையின் போது எதிர்பார்க்கப்படும் விற்பனை விலையிலிருந்து அவ்விற்பனையைப் பூர்த்தி செய்வதற்கு ஏற்படக்கூடிய செலவினத்தை நீக்கவருவதாகும். பயனற்ற,மந்தகதியில்நகரும்,குறைபாடுள்ள இருப்புக்களின் பொருட்டு தேவையான இடத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 4.7 நிதிச்சொத்துக்கள் – ஏற்பிசைவும் அளவீடும்

### 4.7.1 ஆரம்பகட்ட ஏற்பிசைவு

நிதிச்சொத்துக்கள் சார்பான கருவிகளின் ஒப்பந்த விதிகளுக்கு அமைய கம்பனி ஒரு கட்சியினராய் வருகின்ற திகதியில் அனைத்து நிதிச்சொத்துக்களும் முதலாவதாக ஏடுகளில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. இது “வழக்கமான வழிமுறைகளில் இடம் பெறும் வர்த்தகத்தை” : சந்தைப் பகுதியில்

பிரமாணங்கள் அல்லது சம்பிரதாயத்தால் பொதுவாக உருவாக்கப்பட்ட நேர வரையறைக்குள் சொத்துக்களின் விநியோகத் தேவைப்பாட்டுடனான நிதிச் சொத்துக்களின் விற்பனை அல்லது கொள்வனவை உள்ளடக்குகின்றது.

### 4.7.2 ஆரம்பகட்ட அளவீடுகள்

ஆரம்ப ஏற்பிசைவின் போது நிதிக் கருவிகளின் வகைப்படுத்தல்கள் அவற்றைக் கொள்வனவு செய்யும் முகாமைத்துவ நோக்கிலும் வகைப்படுத்தலிலும் தங்கியுள்ளது. சகல நிதிக் கருவிகளும்இவற்றில் கொடுக்கல்வாங்கல் கிரயங்கள், இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் நிதிச் சொத்துக்களும் நிதிப் பொறுப்புகளும் பதியப்படும் சந்தர்ப்பம் தவிர்ந்த வேளையில் அவற்றின் நியாயப் பெறுமதியில் ஆரம்பத்தில் அளவிடப்படுகின்றன.

### 4.7.3 பின்னரான அளவீடுகள்

கம்பனி பின்னர் பெறுதியல்லா நிதிச் சொத்துக்களை விற்பனைக்காக உள்ள நிதி சார்பான கருவிகள், முதிர்விற்காக உள்ள முதலீடுகள், கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியிலான நிதிச் சொத்துக்களாக வகைப்படுத்தியுள்ளன.

### 4.7.4 நிதிச்சொத்துக்களை மீள்வகைப்படுத்தல்

சில சந்தர்ப்பங்களில் கம்பனி ஆரம்ப ஏற்பிசைவை அடுத்து FVTPL முறையில் பதியப்படாத பெறுதியல்லா நிதிச் சொத்துக்களை மீள வகைப்படுத்தப்பட உள்ளன.

- விற்பனைக்கென காணப்படுகின்ற வகைகள் மற்றும் விற்பனைக்காக உள்ளவை, கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள் அல்லது முதிர்விற்காக உள்ள வகைகள். மீள்வகைப்படுத்தல்கள் அவை மீள் வகைப்படுத்தப்பட்ட திகதியில் உள்ள நியாயப் பெறுமதியில் பதியப்படுகின்றன. இது புதிய இலதாக்கல் கிரயமாகின்றது. விற்பனைக்கென காணப்படுகின்ற வகையில் மீள் வகைப்படுத்தப்படும் நிதிச் சொத்திற்காக EIRமுறையைப் பயன்படுத்தி அச் சொத்தின் ஏதேனும் முன்னைய இலாபங்கள் அல்லது நட்டங்கள் உரிமை மூலதனத்தில் ஏற்பிசைவு செய்யப்படின் முதலீட்டின் எஞ்சிய ஆயுட்காலத்திற்கு அவை இலதாக்கப்படுகின்றன. புதிய இலதாக்கல்

கிரயத்திற்கும் எதிர்பார்க்கப்பட்ட காசுப்பாய்ச்சலுக்கும் இடையிலான வேறுபாடுகள் ஏதேனும் இருப்பின் அவையும் EIRமுறையைப் பயன்படுத்தி அச் சொத்தின் எஞ்சிய ஆயட்காலத்தினுள் இலதாக்கப்படுகின்றன. இச்சொத்து, பின்னர் இழப்பாவதற்கு நிர்ணயிக்கப்படுமாயின் அது உரிமையாண்மையில் இருந்து வருமானக்கூற்றிற்கு மறுசுழற்சி செய்யப்படுகின்றது.

- விற்பனைக்காக உள்ளவைகளிலும், கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகளின் வகையிலும் கடன்கள் மற்றும் பெறவேண்டியவை தொடர்பான வரைவிலக்கணத்திற்கு உட்பட்டு கம்பனி அந் நிதிச் சொத்தை முதிர்வுக் காலம் வரையில் அல்லது எதிர்வுகூறத்தக்க எதிர்காலத்திற்கு தொடர்ந்து வைத்திருக்கும் நோக்கம் இருப்பின். ஓர் நிதிச் சொத்து மீள் வகைப்படுத்தப்பட்டு, காசுப் பெறுவனவுகளின் அறவீட்டிலான அதிகரிப்பின் காரணமாக எதிர்காலக் காசுப் பெறுவனவுகளின் மதிப்பீடுகளை கம்பனி பின்னர் அதிகரிக்குமாயின் அவ் அதிகரிப்பின் தாக்கம் மதிப்பீட்டு மாற்றத் திகதியியிலிருந்து EIR இற்கான ஓர் சீராக்கமாக ஏற்பிசைவு செய்யப்படும்.

  மீள் வகைப்படுத்தல் முகாமைத்துவத்தின் தேர்வில் இடம்பெற்று கருவிக்குக் கருவி என்ற அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது.

### 4.7.5 நிதிச்சொத்துக்களின் குறை ஏற்பிசைவு

ஓர் நிதிச்சொத்து (அல்லது பொருத்தமான வேளையில் நிதிச் சொத்தின் ஓர் பகுதி அல்லது ஒரே நிதிச் சொத்துக் கம்பனியின் ஓர் பகுதி) பின்வரும் சந்தர்ப்பங்களின் போது குறை ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

- சொத்துக்களின் முதிர்ச்சியின் போது அவைகளில் இருந்தான காசுப்பாய்ச்சலை பெற்றுக்கொள்ளும் உரிமைகள்.

- கம்பனி இச்சொத்துக்களில் இருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய காசுப்பாய்ச்சல் தொடர்பான உரிமையை அல்லது பொருண்மையான தாமதம் இன்றி முற்றாகவே பெற்றுக்கொள்ளப்பட்ட காசுப்பாய்ச்சல்களை செலுத்தும் ஓர் கடப்பாட்டை எதிர்வுகூறி மூன்றாம் நபருக்கு மாற்றுதல் மற்றும் ஒன்றில் :

- கணிசமாக அனைத்து சொத்துக்கள் தொடர்பான இடர்கள் மற்றும் வெகுமதிகளை கம்பனி மாற்றல் அல்லது

- கம்பனி சொத்துக்கள் தொடர்பான அனைத்து இடர்கள் மற்றும் வெகுமதிகளை மாற்றாது சொத்துக்கள் தொடர்பான கட்டுப்பாட்டை மட்டும் மாற்றுதல்.

சொத்துக்களின் கட்டுப்பாடுகளை மாற்றாது அல்லது சொத்துக்களின் சகல இடர்களையும் வெகுமதிகளையும் பொருண்மையாக வைத்துக்கொள்ளவோ அல்லது மாற்றாது அனுப்புவதன் மூலமான ஒழுங்கை ஏற்படுத்தி அல்லது ஓர் சொத்திலிருந்து காசுப்பாய்ச்சல்கள் பெறப்படுவதற்கு அதன் உரிமையை கம்பனி மாற்றுகையில் கம்பனிக்கு இச்சொத்துக்களில் உள்ள ஈடுபாடுகள் வரையில் சொத்துக்கள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. அச் சந்தர்ப்பத்தில், கம்பனி தொடர்பான பொறுப்பையும் கம்பனி ஏற்பிசைவு செய்கின்றது. மாற்றப்பட்ட சொத்தும் தொடர்புடைய பொறுப்பும் கம்பனி கொண்டுள்ள உரிமைகளும் கடப்பாடுகளும் வெளிப்படுத்தப்படும் அடிப்படையில் அளவிடப்படுகின்றன. மாற்றப்பட்ட சொத்தின் மீதான பொறுப்பு சொத்தின் உண்மையான கொண்டுசெல்லல் தொகை மற்றும் மீளச் செலுத்துவதற்கு கம்பனிக்குத் தேவையான அதி உயர்ந்த பெறுமதி அகியவற்றில் குறைவானதில் அளவிடப்படுகின்றது.

## 4.7.6 இனங்காணல், அளவீடு மற்றும் பெறுமதி இழப்பு மதிப்பீடுகள்

ஒவ்வொரு அறிக்கை திகதியிலும் கம்பனி, இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் கொண்டு செல்லப்படாத நிதிச்சொத்துக்கள் இழப்பு மதிப்பிடப்பட்டுள்ளனவா என்பதற்கான புறநிலை ஆதாரங்கள் உள்ளனவா என்பதை மதிப்பிடுகின்றது.
சொத்து(கள்) இன் ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர் ஏற்படும் ஓர் இழப்புச் சம்பவத்திற்கான புறநிலைச்சான்று உள்ள போதும் இழப்புச் சம்பவம் நம்பகரமான முறையில் மதிப்பிடக்கூடிய போது சொத்து(கள்) இன் எதிர்கால காசுப்பாய்ச்சல்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்துகையில் ஓர் நிதிச்சொத்து அல்லது நிதிச் சொத்துக் கம்பனியின் பெறுமதியில் இழப்பு ஏற்படுகின்றது.

கம்பனி கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் முதலீட்டுப் பிணைகள் சேகரிக்கப்பட முடியாதவை என நிர்ணயிக்கப்படுகையில் கம்பனி அவற்றைப் பதிவழிக்கின்றது.

## 4.8 காசு மற்றும் வங்கி மீதிகள்

கையிலுள்ள காசு மற்றும் வங்கியிலுள்ள காசு என்பன காசு மற்றும் வங்கி மீதிகளாக விதந்துரைக்கப்பட்டுள்ளன.

காசுப்பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக கையிலுள்ள காசு,வங்கி வைப்புக்கள் மற்றும் வங்கி மேலதிகப் பற்றுக்களின் தேறிய நிலுவைகள் என்பவற்றை காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் உள்ளடக்கியுள்ளன. குறுங்கால முதிர்வுகளுடனான முதலீடுகள் அதாவது கொள்வனவுத் திகதியில் இருந்து மூன்று மாதங்கள் அல்லது அதனிலும் குறைவானவையும் காசிற்குச் சமமானவையாகக் கருதப்பட்டுள்ளன.

## 4.9 கூறப்பட்ட மூலதனம்

சாதாரண பங்குகள் உரிமையாண்மையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. உரிமையாண்மை பத்திரங்கள்,காசு அல்லது ஏனைய பெறப்பட்ட அல்லது பெற வேண்டிய மூலவளங்களின் நியாயமான பெறுமதியின் அடிப்படையில் உரிமையாண்மை பத்திர வழங்கலின் தேறிய நேர் கிரயத்தில் மதிப்பிடப்பட்டுள்ளன.

## 4.10 ஓய்வூதிய நலக் கடப்பாடுகள்

### 4.10.1அங்கீகரிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் - பணிக்கொடை

1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை அதிகாரச்சட்டத்திற்கு இணங்க கம்பனி பணிக்கொடைக் கொடுப்பனவை மேற்கொள்ளப் பொறுப்புடையதாகும். இதன் படி, தொடர்ச்சியாக 5 ஆண்டு கால சேவையைப் பூர்த்தி செய்தால் மாத்திரமே பணிக்கொடைக் கொடுப்பனவிற்கான கடப்பாடு உருவாகின்றது. மேற்குறித்த அதிகாரச்சட்டத்தின் கீழ் கம்பனியின் கடப்பாடுகள் காப்பீட்டுக் கணிப்பு அனுமானஅடிப்படையிலான ஓர் சமன்பாட்டைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகின்றது. பொறுப்பு வெளிவாரியாக நிதியீட்டப்படுவதில்லை.

### 4.10.2அங்கீகரிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம்

அங்கீகரிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம், ஊழியர்கள் தொழிலில்இருந்து விலகிய பின்னரான நலன் திட்டத்தின் கீழ் ஓர் நிறுவனம் நிலையான தொகை ஒன்றை வேறோர் நிறுவனத்திற்கு செலுத்தி எதிர்காலத் தொகைளைச் செலுத்துவதற்கு

தொடர்ச்சியான அல்லது சட்ட ரீதியான கடப்பாடோ இல்லாமையாகும். விதந்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களிற்கான கடப்பாடுகள், ஊழியரால் சேவை மேற்கொள்ளப்படும் காலப்பகுதியிலான வருமானக் கூற்றில் ஊழியர் நலன் செலவினமாக ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளது.

### அ. ஊழியர் சேமலாப நிதியம்

கம்பனியும் ஊழியர்களும் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஒவ்வொரு ஊழியரின் சம்பளத்தில் இருந்து முறையே 12%ஐயும் 10% ஐயும் பங்களிப்பாகச் செலுத்துகின்றன.

### ஆ. ஊழியர் நம்பிக்கை நிதியம்

கம்பனி ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு ஒவ்வொரு ஊழியரின் சம்பளத்தில் இருந்தும் 3%பங்களிப்பை செலுத்துகின்றது.

## 4.11 நிதிப் பொறுப்புக்கள்

## 4.11.1ஆரம்ப ஏற்பிசைவும் அளவீடும்

நிதிப் பொறுப்புக்களின் விதப்புரைகள் மற்றும் ஒப்பந்த ரீதியான ஒழுங்குகளின் முதன்மைக்கு அமைய ஏனைய நிதிப் பொறுப்புகள் அல்லது இலாபம் அல்லது நட்டத்தினூடாக நிதிப் பொறுப்புகளை நியாயப் பெறுமதியில் (FVTPL) நிதிப் பொறுப்புகளாக கம்பனி வகைப்படுத்துகின்றது.

கம்பனி, நிதிப் பொறுப்புக்களின் ஒப்பந்த ரீதியான ஏற்பாடுகளுக்கு ஓர் தரப்பாக உள்ளாகும் போது நிதிப் பொறுப்புகளை கம்பனி நிதி நிலைமைக் கூற்றில் ஏற்பிசைவு செய்கின்றது.

### i. FVTPL இல் நிதிப்பொறுப்புக்கள்

ஆரம்பத்தில் பதியப்பட்ட நிதிப் பொறுப்புக்கள் அல்லது விற்பனை நோக்கில் பேணப்பட்டு வருகின்ற நிதிப்பொறுப்புக்கள் இதில் உள்ளடங்குகின்றது. ஆரம்ப பதிவுகளின் பின்னர் நிதிப் பொறுப்புக்கள் அவற்றின் நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டு அவற்றின் வேறுபாடுகள் இலாப நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

ஆரம்ப ஏற்பிசைவை அடுத்து, கொடுக்கல்வாங்கல் கிரயம் நேரடியாக கொள்வனவுடன் சேர்க்கப்பட்டு ஏற்கப்பட்டவையாக இலாபம் அல்லது நட்டமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. FVTPL இல் நிதிச் சொத்துக்களைப் போன்றே FVTPL இல் நிதிப்பொறுப்புக்களும் வகைப்படுத்தப்படுகின்றன.

### ii. ஏனைய நிதி பொறுப்புக்கள்

வைப்புக்கள்,கம்பனியால் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் ஏனைய நிதிப் பெறுவனவுகளை உள்ளடக்கிய ஏனைய நிதிப்பொறுப்புக்கள் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டு கொள்வனவிற்காக ஏற்கப்பட்ட கிரயம் கழிக்கப்பட்டு அதன் பின்னர் EIRமுறையைப் பயன்படுத்தி இழப்புக் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. இழப்புக் கிரயம் EIR இன் உள்ளார்ந்த ஓர் பகுதியைக் கொண்ட கிரயங்கள் மற்றும் வழங்கலிலான பங்கு வட்டம் அல்லது கழிவைக் கருத்திற்கொண்டு கணிப்பிடப்படுகின்றன.

## 4.11.2 நிதிப்பொறுப்புக்களின் குறை ஏற்பிசைவு

நிதிப்பொறுப்புக்கள் தொடர்பான பொறுப்புக்கள் காலாவதியாகும் போது அல்லது இரத்தாகும் போது இப்பொறுப்புக்கள் குறை ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. தற்போதுள்ள நிதிப் பொறுப்புகள் அதே வழங்குனரால் கணிசமாக வேறு நிபந்தனைகளுடன் பதிலீடு செய்யப்படுகையில் அல்லது தற்போதுள்ள பொறுப்புகள் கணிசமாக திருத்தப்பட்டிருப்பின் அத்தகைய பதலீடு அல்லது திருத்தம் ஆரம்ப பொறுப்பு குறை ஏற்பிசைவு செய்யப்பட்டதாகக் கருதப்பட்டு ஓர் புதிய பொறுப்பாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. ஆரம்ப நிதிப்பொறுப்பின் கொண்டு செல்லல் பெறுமதிக்கும் செலுத்தப்பட்ட வருபேறிற்கும் இடையிலான வேறுபாடு இலாபம் அல்லது நட்டமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

## 4.12 ஏற்பாடுகள்

கடந்த நிகழ்வின் விளைவாக நிகழ்காலத்தில் கம்பனியால் ஏதேனும் (சட்ட அல்லது ஆக்கபூர்வ) கடப்பாடுகள் காணப்படும் போது ஏற்பாடுகள் ஏற்பிசைவு செய்யப்பட்டு இக்கடப்பாடுகளைத் தீர்ப்பதற்காக பொருளாதார நலன்களைக் கொண்ட வளங்களின் வெளிப்பாய்ச்சல்கள் தேவைப்படுவதுடன் நம்பகரமான மதிப்பீடு கடப்பாட்டின் தொகைக்காக மேற்கொள்ளப்பட வேண்டும். ஏற்பாடுகள்

தொடர்பான செலவினங்கள் ஏதேனும் மீளளிப்புகளின் தேறலாக வருமானக்கூற்றில் வெளிப்படுத்தப்படுகின்றது.

## 4.13 காசுப்பாய்ச்சல் கூற்று

காசுப்பாய்ச்சல் கூற்று LKAS-07 இல் விதந்துரைக்கப்பட்டவாறு நேரில் முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. கையிலுள்ள காசு,வங்கியிலுள்ள காசு மற்றும் வங்கி மேலதிகப்பற்று என்பவற்றை காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் உள்ளடக்கியுள்ளன.

## 4.14 நிறுவத்தின் பகுதிகள்/பிரிவுகள் தொடர்பான விபரங்கள்

நிறுவனத்தின் ஒரு பகுதி/பிரிவு என்பது,சேவைகளை வழங்குவதில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வேறுபடுத்தக்கூடிய ஒரு கூறாகும். இப் பகுதியின் இடர்களும் வருவாய்களும் ஏனைய பகுதிகளில் இருந்து வேறுபடுத்தக்கூடியவையாகும். கம்பனியின் அனைத்துச் செயற்பாடுகளும் ஒரு பகுதியாக கருதப்படுவதனால் வேறுபடுத்தக்கூடிய வகையிலான பகுதிகள்/ பிரிவுகள் கம்பனி கொண்டிருக்கவில்லை.

## நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

| | | 2015/2016 | 2014/2015 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| **5.** | **வருமானம்** | | |
| | எப்பாவல பாறைப் பொஸ்பேட் | 424,243,777 | 429,697,844 |
| | உயர்தர எப்பாவல பாறைப் பொஸ்பேட் | 92,069,620 | 99,817,395 |
| | தெங்கு பசளை விற்பனை | 46,424,398 | 520,655 |
| | யூரியா மற்றும் எம்ஓபீ | (3,000) | 395,100 |
| | | ---------------- | ---------------- |
| | | 562,734,795 | 530,430,994 |
| | | ========= | ========= |
| **6.** | **ஏனைய வருமானங்கள்** | | |
| | *கடன் மற்றும் வருமதி வகைகள்* | | |
| | வட்டி வருமானம் | 36,526,937 | 41,231,730 |
| | *விற்பனைக்கென ஒதுக்கப்பட்டவைகள்* | | |

| | | | |
|---|---|---|---|
| | பங்கிலாப வருமானம் | 200,000 | 600,000 |
| | நானாவிதமான வருமானம் | 1,056,514 | 161,604 |
| | | ---------------- | ---------------- |
| | | 37,783,451 | 41,993,334 |
| | | ========= | ========= |

| | | **2015/2016** | **2014/2015** |
|---|---|---|---|
| | | **ரூபா** | **ரூபா** |
| **7.** | **பின்வருவனவற்றை அறவிட்டதன் பின்னர் தொழிற்பாட்டிலிருந்தான இலாபம் :** | | |
| | பதவியணி கிரயம் | 236,020,214 | 192,570,757 |
| | பணிப்பாளர் கட்டணங்கள் | 455,476 | 356,600 |
| | பணிப்பாளர் செலவுகள் | - | 82,500 |
| | பெறுமானத்தேய்வு | 29,757,670 | 24,317,754 |
| | கணக்காய்வுக் கட்டணம் | 227,384 | 603,219 |
| | விதந்துரைக்கப்பட்ட நலன் திட்டம் | 5,980,955 | 4,566,291 |
| 8. | **வருமானவரி** | | |
| | ஆண்டிற்கான இலாபத்தின் மீதான வருமான வரி | 10,861,720 | 14,487,584 |
| | பிற்போடப்பட்ட வரி | 23,445,312 | 3,281,938 |
| | | ---------------- | ---------------- |
| | | 34,307,032 | 17,769,522 |
| | | ========= | ========= |

| | | | |
|---|---|---|---|
| 8.1 | **வருமான வரியின் இணக்கம்** | | |
| | வரிக்கு முன்னைய இலாபம் | 60,893,567 | 117,858,487 |
| | வியாபாரமல்லாத வருமானம் | (36,726,936) | (41,831,731) |
| | வரிக்கு அனுமதிக்கப்படாத விடயங்களின் கூட்டுத்தொகை | 43,820,394 | 28,945,034 |
| | வரிக்கு அனுமதிக்கப்பட்ட செலவினங்களின் கூட்டுத்தொகை | (29,665,156) | (56,382,016) |

| | | |
|---|---|---|
| வட்டி வருமானம்/ நிலையான சொத்து விற்பனை இலாபம் | 36,616,875 | 41,404,370 |
| தகுதிப்படுத்தப்பட்ட கொடுப்பனவுகள் | (37,668,062) | (37,850,492) |
| | ---------------- | ---------------- |
| வரி அறவிடத்தக்க இலாபம் | 37,270,681 | 52,143,652 |
| | ========= | ========= |

| | **2015/2016** | **2014/2015** |
|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** |
| வருமான வரி 28% | 10,435,791 | 14,600,223 |
| உத்தேச வரிக் கழிவு | (89,939) | (112,639) |
| முன்னைய ஆண்டின் போதான குறை/(மிகை) ஏற்பாடு | 515,868 | - |
| | ---------------- | ---------------- |
| | 10,861,720 | 14,487,584 |
| | ========= | ========= |

## 9. பங்கு ஒன்றிற்கான உழைப்பு

கம்பனியின் சாதாரண பங்குதாரர்களுக்குரிய இலாபத்தை ஆண்டின் போது வழங்கப்பட்ட சாதாரண பங்குகளின் நிறையிடப்பட்ட சராசரி எண்ணிக்கையினால் பிரிப்பதன் மூலம் பங்கொன்றிற்கான அடிப்படை உழைப்பு கணக்கிடப்படுகின்றது.

| | **2015/2016** | **2014/2015** |
|---|---|---|
| சாதாரண பங்குதாரர்களுக்குரிய இலாபம் | 26,586,535 | 100,088,965 |
| ஆண்டின் போது நிலுவையான சாதாரண பங்குகளின் நிறையிடப்பட்ட சராசரி எண்ணிக்கை | 7,251,000 | 7,251,000 |
| பங்கொன்றிற்கான அடிப்படை உழைப்பு | 3.67 | 13.80 |
| | ======= | ======== |

## 10. ஆதன, இயந்திரம் மற்றும் உபகரணம்

*(இலங்கை ரூபாக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.)*

| கிரயம் | 2015 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | சேர்ப்பனவு | கழிப்பனவு | 2016 மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|---|
| கட்டிடங்கள் | 156,458,238.44 | 14,558,824 | - | 171,017,062.76 |
| உள்ளக வீதிகள் | 65,139,730.22 | - | - | 65,139,730.22 |
| இயந்திர உபகரணங்கள் | 86,601,578.00 | 301,431 | - | 86,903,009.18 |
| மோட்டார் வாகனங்கள் | 76,023,221.00 | 23,729,940 | - | 99,753,161.00 |
| அலுவலக உபகரணம் | 2,401,142.00 | - | - | 2,401,142.00 |
| மின் உபகரணம் | 9,359,502.63 | 3,564,835 | - | 12,924,337.65 |
| தளபாடங்களும் பொருத்துக்களும் | 6,391,970.68 | 895,325 | - | 7,287,295.73 |
| ஆய்வுகூட உபகரணம் | 407,463.00 | - | - | 407,463.00 |
| கணனி வன்பொருட்களும் மென்பொருட்களும் | 13,980,709.10 | 419,440 | - | 14,400,149.10 |
| நானாவித சொத்துக்கள் | 10,685,232.01 | 598,290 | - | 11,283,522.01 |
| | 427,448,787 | 44,068,085.57 | - | 471,516,872.65 |

| பெறுமானத்தேய்வு | 2015 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | ஆண்டிற்கான விதிப்பனவு | மாற்றம் | 2016 மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|---|
| கட்டிடங்கள் | 24,443,358 | 6,486,779 | - | 30,930,136.95 |
| உள்ளக வீதிகள் | 3,113,206 | 3,256,986 | - | 6,370,192.33 |
| இயந்திர உபகரணங்கள் | 32,525,296 | 3,733,637 | - | 36,258,933.46 |
| மோட்டார் வாகனங்கள் | 47,257,388 | 12,370,155 | - | 59,627,542.91 |
| அலுவலக உபகரணம் | 2,070,240 | 95,214 | - | 2,165,453.79 |
| மின் உபகரணம் | 3,643,270 | 1,441,409 | - | 5,084,679.00 |
| தளபாடங்களும் பொருத்துக்களும் | 4,271,065 | 591,341 | - | 4,862,405.68 |
| ஆய்வுகூட உபகரணம் | 407,463 | - | - | 407,463.26 |

| | | | | |
|---|---|---|---|---|
| கணனி வன்பொருட்களும் மென்பொருட்களும் | 10,971,337 | 1,167,509 | - | 12,138,846.21 |
| நானாவித சொத்துக்கள் | 8,059,774 | 614,640 | - | 8,674,413.97 |
| | ------------------------ | ------------------------ | ---------- | --------------------------- |
| | 136,762,398 | 29,757,670 | - | 166,520,067.56 |
| | =========== | ========== | ==== | ============ |
| **குறைத்தெழுதிய பெறுமதி** | 290,686,390 | | | 304,996,805 |
| | =========== | ========== | ==== | ============ |
| ***மூலதன நடைமுறை வேலை*** | **2015 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி** | **ஆண்டிற்கான சேர்ப்பனவு** | **மாற்றம்** | **2016 மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** |
| இறப்பர் பசளைச் செயற்திட்டம் | 1,693,908 | - | (1,693,908) | - |
| எஸ்எஸ்பீ செயற்திட்டம் (புதியது) | 2,296,595 | - | (2,296,595) | - |
| கழிவறையுடன் கூடிய காவல் கூடம் | 2,676,267 | - | (2,676,267) | - |
| ஆலை அலுவலகம் மற்றும் களஞ்சிய தொழிற்சாலை | - | 10,219,548 | (10,219,548) | - |
| புதிய அரைக்கும் இயந்திரம் (02) | 23,738,101 | 9,183,796 | - | 32,921,897.43 |
| புதிய ஆலை ஸ்தாபிப்பு | 56,994,583 | - | (49,554,583) | 7,440,000.00 |
| சீசீரீவீ கமரா முறைமை | 1,000,000 | 1,885,000 | (2,885,000) | - |
| களத்தில் புதிய கழிவறை கூடம் | 992,722 | - | (992,722) | - |
| தெங்குப் பசளைக் கலவை இயந்திரம் | - | 244,508 | (244,508) | - |
| | ---------------- | ----------------- | ---------------- | ----------------- |
| | **89,392,177** | **21,532,852** | **(70,563,132)** | **40,361,897** |
| | ========= | ========== | ========= | ========== |
| **ாத்தம்** | **380,078,567** | | | **345,358,703** |

| | உரிமை % | 2016.03.31 ரூபா | 2015.03.31 ரூபா |
|---|---|---|---|
| **11. உரிமை மூதலீடுகள்** | | | |
| வரையறுக்கப்பட்ட ஜி.எஸ்.எம்.பி டெக்னிக்கல் சேவிசஸ் தனியார் நிறுவனத்தில் முதலீடு ஒவ்வொன்றும் 10/= பெறுமதியான 100,000 சாதாரண பங்குகள் | 17% | 1,000,000 | 1,000,000 |

ஜி.எஸ்.எம்.பி டெக்னிக்கல் சேவிசஸ் தனியார் நிறுவனம் பட்டியலிடப்படாத ஒரு கம்பனி என்பதால் முதலீட்டின் நியாயமான விலையை பெறக்கூடியதாக இல்லை. இம்முதலீட்டினை எதிர்காலத்தில் விற்பனை செய்து இலாபமீட்டுதல் என்ற நோக்கம் முகாமையிடம் காணப்படாமையினால் இம்முதலீட்டின் பெறுமதியை அதன் கிரயத்தில் பேணுவதற்கு முகாமை தீர்மானித்துள்ளது.

| | | | **2015/2016** ரூபா | **2014/2015** ரூபா |
|---|---|---|---|---|
| **12.** | இருப்புகள் | | | |
| | வியாபார இருப்புக்கள் | - எப்பாவல முடிவுப் பொருட்கள் | 16,039,437 | 20,176,706 |
| | | - தேறாத இலபத்திற்கான ஏற்பாடு | (334,105) | |
| | | - மூலப் பொருள் இருப்புகள் | 14,868,782 | 11,043,009 |
| | பொதுவான இருப்புக்கள் | | 59,139,039 | 48,226,904 |
| | மூலதன நடைமுறை வேலையிலிருந்து மாற்றப்பட்ட உதிரிப்பாக இருப்புகள் | | 30,751,574 | - |
| | வியாபார இருப்புகள் - வாரியபொல | | 6,720,069 | 4,872,523 |
| | | | 127,184,796 | 84,319,143 |
| | கழி : பொதுவான இருப்புக்களின் பெறுமதி இழப்பு | | (587,838) | (587,838) |

| | | 2015/2016 | 2014/2015 |
|---|---|---|---|
| | | 126,596,959 | 83,731,306 |
| | | ========= | ========= |
| | | **2015/2016** | **2014/2015** |
| | | **ரூபா** | **ரூபா** |
| **13.** | **வைப்புக்கள், முற்பணக் கொடுப்பனவுகள், ஏனைய பெறவேண்டியவைகள்** | | |
| | ஊழியர் கடனும் முற்பணங்களும் | 76,675,391 | 47,879,216 |
| | ஊழியர் நட்டஈட்டு முற்கொடுப்பனவுகள் | 17,699,426 | 26,465,980 |
| | வைப்புக்களும் முற்பணக் கொடுப்பனவுகளும் | 2,900,485 | 3,563,243 |
| | றிப்போ இலிருந்தான வட்டி | 4,916 | - |
| | | 97,280,218 | 77,908,442 |
| | | ========= | ========= |
| **14.** | **குறுங்கால வைப்புக்கள்** | | |
| | நிலையான வைப்புக்கள் | | |
| | மக்கள் வங்கி | 104,811,356 | 110,121,691 |
| | இலங்கை வங்கி | 110,974,399 | 125,392,496 |
| | தேசிய சேமிப்பு வங்கி | 18,045,559 | 17,046,107 |
| | | 233,831,314 | 252,560,294 |
| | | ========= | ========= |
| **15.** | **காசும் காசிற்குச் சமமானவைகளும்** | | |
| | றிப்போ - இலங்கை வங்கி | 25,000,000 | |
| | முத்திரை கட்டுநிதி | 7,151 | 7,068 |
| | வங்கியிலுள்ள காசு | 2,542,623 | 8,072,995 |
| | கையிலுள்ள காசு | 120,000 | 120,000 |
| | | 27,669,774 | 8,200,063 |
| | | ========= | ========= |

| | | 2015/2016 | 2014/2015 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| **16.** | கூறப்பட்ட மூலதனம் | | |
| | வழங்கப்பட்டு முழுமையாக செலுத்தப்பட்டவை | 72,510,000 | 72,510,000 |
| | | =========== | ========= |
| | வழங்கப்படும் சாதாரண பங்குகின் எண்ணிக்கை | 7,251,000 | 7,251,000 |
| | | =========== | ========= |

| | | 2015/2016 | 2014/2015 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| 17. | **ஊழியர் இளைப்பாறல் கடப்பாடுகள்** | | |
| | ஆண்டின் ஆரம்பத்திலுள்ள மீதி | 31,508,910 | 29,062,978 |
| | நடைமுறை சேவைக் கிரயம் | 1,601,217 | 1,659,993 |
| | வட்டிக் கிரயம் | 4,379,738 | 2,906,297 |
| | | ------------------ | ------------------ |
| | | 37,489,865 | 33,629,268 |
| | ஆண்டின் போதான கொடுப்பனவுகள் | (4,786,110) | (1,036,180) |
| | இளைப்பாறல் தொடர்பான மதிப்பீட்டின் (இலாபம்) /நட்டம் | (2,991,618) | (1,084,179) |
| | | ------------------- | -------------------- |
| | ஆண்டின் இறுதியில் உள்ள மீதி | 29,712,137 | 31,508,910 |
| | | =========== | ========= |

பொறுப்புக்களை கணிப்பீடு செய்வதில் பின்வரும் எடுகோள்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன

| | | |
|---|---|---|
| எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த சராசரி சம்பள உயர்வு | 3% | 3% |
| கழிவு விகிதம் | 10% | 10% |

| | | 2015/2016 | 2014/2015 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| **18.** | **பிற்போடப்பட்ட வரி** | | |
| | ஆண்டின் ஆரம்பத்திலுள்ள மீதி | 8,053,929 | 4,771,990 |
| | ஆண்டின் போதான சீராக்கம் | 31,499,241 | 3,281,939 |
| | | ------------------ | ---------------------- |
| | ஆண்டின் இறுதியில் உள்ள மீதி | 39,553,170 | 8,053,929 |
| | | =========== | ========= |
| **19.** | **செலுத்த வேண்டிய வரி** | | |
| | ஆண்டின் ஆரம்பத்திலுள்ள மீதி | 287,755 | 4,575,164 |
| | ஆண்டுக்கான ஏற்பாடு | 10,841,720 | 14,487,584 |
| | ஆண்டின் போதான கொடுப்பனவுகள் | (5,327,690) | (16,100,558) |
| | பிடித்து வைத்தல் வரி | (1,626,952) | (2,674,436) |
| | | ------------------- | -------------------- |
| | ஆண்டின் இறுதியில் உள்ள மீதி | 4,174,833 | 287,755 |
| | | =========== | =========== |
| **20** | ஏனைய செலுத்த வேண்டியவைகளும், அட்டுறு செலவினங்களும் | | |
| | அட்டுறு செலவினங்கள் | 17,085,765 | 36,683,704 |
| | ஏனைய செலுத்த வேண்டியவைகள் | 7,739,914 | 3,688,416 |
| | | ------------------- | -------------------- |
| | | 24,825,679 | 40,372,120 |
| | | =========== | =========== |

| | | 2015/2016 | 2014/2015 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| 21 | **காசுப் பாய்ச்சல் கூற்றுக்கான குறிப்புக்கள்** | | |
| 21.1 | **ஆண்டின் ஆரம்பத்தில் உள்ள காசும் காசிற்குச் சமனானவைகளும்** | | |
| | றிப்போ - இலங்கை வங்கி | - | - |
| | முத்திரை கட்டுநிதி | 7,068 | 4,048 |
| | வங்கியிலுள்ள காசு | 8,072,995 | 12,930,945 |
| | கையிலுள்ள காசு | 120,000 | 110,000 |
| | | 8,200,063 | 13,044,993 |
| 21.2 | **ஆண்டின் இறுதியில் உள்ள காசும் காசிற்குச் சமனானவைகளும்** | | |
| | றிப்போ - இலங்கை வங்கி | 25,000,000 | - |
| | முத்திரை கட்டுநிதி | 7,151 | 7,068 |
| | வங்கியிலுள்ள காசு | 2,542,623 | 8,072,995 |
| | கையிலுள்ள காசு | 120,000 | 120,000 |
| | | 27,669,774 | 8,200,063 |
| 22. | **வகைப்படுத்தலால் நிதிக் கருவிகளை வகைப்படுத்தல்** | | |
| | **நிதிச் சொத்துக்கள்** | | |
| | கையிலுள்ள மற்றும் வங்கியிலுள்ள காசு | 2,669,774 | 8,200,063 |
| | **கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள்** | | |
| | வியாபாரப் பெறவேண்டியவைகள் | 36,318,629 | 40,766,197 |
| | ஊழியர் கடனும் முற்பணங்களும் | 76,675,391 | 47,879,216 |
| | வைப்புகள் | 1,399,588 | 1,523,837 |
| | குறுங்கால வைப்புகள் | 233,831,314 | 252,560,294 |

| | | |
|---|---|---|
| **விற்பனைக்கென ஒதுக்கப்பட்டவைகள்** | | |
| உரிமை முதல் முதலீடுகள | 1,000,000 | 1,000,000 |
| | | |
| **நிதிப் பொறுப்புகள்** | | |
| ஏனைய செலுத்த வேண்டியவைகளும் அட்டுறு செலவினங்களும் | 24,825,679 | 40,372,120 |
| வியாபார செலுத்த வேண்டியவைகள் | 9,923,862 | 3,285,468 |

## நிதி சார்பான இடர்களின் முகாமைத்துவம்

கம்பனியின் செயற்பாடுகள் பல்வேறுப்பட்ட நிதி சார்பான இடர்களை எதிர்நோக்க வேண்டியதாகக் காணப்படுகின்றன. இத்தகைய நிதி சார்பான இடர்கள் சந்தை அபாயம் (நாணய இடர், வட்டி வீத இடர் மற்றும் விலை இடர்), கடன் இடர், மற்றும் திரவத்தன்மை இடர் என்பனவாகும். கம்பனியின் ஒட்டுமொத்த இடர் முகாமைத்துவ நடைமுறை நிதி இடர்களின் எதிர்வு கூற முடியாத இடர்களை இனங்கண்டு அவைகளின் எதிர்கணிய விளைவுகளை குறைந்த மட்டத்தில் பேணுவது தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றது. பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில் நிறுவனத்தின் நிதிப்பகுதியினால் இடர் முகாமைத்துவம் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

குறுங்கால வைப்புக்கள்,பணச் சந்தை முதலீடுகள் மற்றும் காசு என்பன முக்கியமான நிதி உபகரணங்களாகக் காணப்படுகின்றன. இத்தகைய நிதி கருவிகளைப் பேணுவதன் பிரதான நோக்கம், கம்பனியின் செயற்பாடுகளுக்காக திரவத்தன்மையை உருவாக்கிப் பேணுதல், கம்பனியின் நிதி ஒதுக்கங்கள் மீதான வருமானத்தை அதிகரித்துக்கொள்ளுதல் என்பனவையாகும். இதற்கு மேலதிகமாக, வியாபார நடவடிக்கைகளில் இருந்து நேரடியாக உருவாகும் வியாபாரப் பெறவேண்டியவைகள் மற்றும் வியாபார செலுத்த வேண்டியவைகள் என்பனவற்றையும் நிதிக்கருவிகளாக பேணிவருகின்றது.

### (அ) கடன் இடர்கள்

நிதிச் சொத்துக்களின் கடன் தரம் கடந்த நிலுவைகளோ அல்லது இழப்புகளோ இன்றி வெளிக் கடன் விகிதங்களால் (இருப்பின்) அல்லது எதிர்த்தரப்பினரின் தவணை தவறப்பட்ட விகிதங்களின் வரலாற்று தகவல்களின் படி

மதிப்பிடப்படக்கூடியதாக உள்ளது. வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் கடன்கள், பெறவேண்டிய நிலுவைகள் மற்றும் கடப்பாடுடைய கொடுக்கல்வாங்கள் உள்ளடங்கலாக காசு மற்றும் காசுக்கு சமனானவைகளில் இருந்தும் வங்கிகள் மற்றும் நிதி நிறுவகங்களிலான வைப்புகளில் இருந்தும் கடன் இடர் உருவாகின்றது.

## (ஆ) வியாபாரப் பெறவேண்டியவைகள்

உள்நாட்டு வாடிக்கையாளர்களை வியாபார பெறவேண்டியவைகள் உள்ளடக்கியுள்ளன. பெறவேண்டிய கடன்களின் நிதி நிலைமை மீது தற்போதைய கடன் மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது. கம்பனி ஓர் முக்கிய கடன் இடரை எந்த ஒரு எதிர்த்தரப்பினருடனும் அல்லது எந்த எதிர் அணியினருடனும் கொண்டிருக்கவில்லை. கம்பனி கடன் நிபந்தனைகள் அங்கீகரிக்கப்பட முன்னர் வாடிக்கையாளர்களை மதிப்பிடுவதற்கான கொள்கைகளையும் நடைமுறைகளையும் உருவாக்கியுள்ளது.

## (இ) திரவத்தன்மை இடர்

கம்பனியின் நிதிப்பகுதியால் எதிர்கால காசுப்பாய்ச்சலினை எதிர்வு கூறல் மேற்கொள்ளப்படுகின்றது. கம்பனியின் எதிர்கால செயற்பாட்டுத் தேவைகளை எதிர்கொள்வதற்குப் போதிய காசைக் கொண்டுள்ளது என்பதை உறுதிசெய்வதற்கு கம்பனியின் திரவத்தன்மை தேவைப்பாடுகளின் சுழற்சி எதிர்வுகூறலைக் கண்காணித்து வருகின்றது. மேலதிக காசு இருப்புக்கள் மற்றும் தொழிற்படு மூலதன முகாமைத்துவத்திற்கான மேற்குறித்த மீதிகள் வங்கி வைப்புக்களில் இடப்படுகின்றன. அறிக்கை திகதியில் கம்பனி ரூபா 233,831,314 (2015.03.31 - ரூபா 252,560,294) வைப்புக்களைக் கொண்டுள்ளதுடன் இவற்றின் மூலமாக திரவத்தன்மை சார்பான இடர்களை நிவர்த்தி செய்வதற்காக உடனடியாக காசு உருவாகும் உட்பாய்ச்சல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

## (ஈ) வட்டிவீதம் இடர்

அரசாங்கம் மற்றும் கடன் தகவுள்ள வங்கிகளிலான வைப்புகள் உள்ளடங்கலாக காசு மற்றும் வங்கி மீதிகளைக் கம்பனி தன்னகத்தே கொண்டுள்ளது. கம்பனி வட்டி வீதம் மற்றும் வருவாய் வளைவு என்பவற்றின் போக்கினை நாளாந்தம் கருத்தில் கொண்டு வட்டி வீத இடரை கண்காணிக்கின்றது.

## (உ) மூலதன இடர் முகாமைத்துவம்

மூலதனத்தை நிர்வகிக்கையில், மூலதனக் கிரயத்தை குறைப்பதற்காக மூலதன வடிவமைப்பு ஒன்றை உயர்ந்த அளவில் பேணுவதற்காகவும் ஏனைய நலன் பெறுனர்களுக்கான நலன்கள் மற்றும் பங்குதாரர்களுக்கான வருவாயை வழங்குவதற்காகவும் கம்பனியின் தொடர்ந்து இயங்கும் திறனை பாதுகாப்பதே கம்பனியின் நோக்காகும்.

## 24 நிகழத்தக்க பொறுப்புகள்∴ நிகழத்தக்க சொத்துக்கள்

கம்பனி அறிக்கைத் திகதியின் இறுதியில் உள்ளவாறான பின்வரும் வாதாடப்பட்டு வரும் வழக்குகளின் தீர்வுகள் தவிர எவ்வித பொருண்மையான நிகழத்தக்க பொறுப்புகள்/ சொத்துக்களைக் கொண்டிருக்கவில்லை.

## 25. பொறுப்புகள்

### 25.1 நிதிப் பொறுப்புகள்

அறிக்கைத் திகதியின் முடிவில் எவ்வித பொருண்மையான நிதிப பொறுப்புகளும் இருக்கவில்லை.

### 25.2 மூலதனப் பொறுப்புகள்

நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்யப்பட்டிராத நிதி நிலைமைக் கூற்றில் ஒப்பந்தமிடப்பட்ட மூலதனச் செலவினம் பின்வருமாறாகும்.

| | 2016.03.31 | 2015.03.31 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| புதிய அரைக்கும் இயந்திரத்திற்காக செலுத்தப்படாத மூலதன செலவினங்கள் | 5,314,114 | 19,151,271 |
| செலுத்தப்படாத இறைகள் | இல்லை | 27,149,612 |

## நிகழத்தக்க பொறுப்புக்களும் நிகழத்தக்க சொத்துக்களும்

நிறுவனமானது ஐந்தொகைத் தினத்தில் கீழே குறிக்கப்பட்டுள்ள வழக்குகள் தவிர வேறு குறிப்பிட்டுக் கூறக் கூடிய வழக்குகள் எதனையும் தன்னகத்தே கொண்டிருக்கவில்லை.

## வாதாடப்படும் வழக்குகள்

இடம்பெற்ற விபத்தொன்றிற்காக் ரூபா 2.5 மில்லியன் தொகையை இழப்பீடாகக் கோரப்பட்டு மூன்றாம் தரப்பினரால் வழக்கு எண்கள் LPL/COU/03-1 & LPL/COU/03-02 இன் மூலம் பதியப்பட்ட வழக்கு.

## 26 அறிக்கைக் காலப்பகுதியின் பின்னரான நிகழ்வுகள்

நிதிக்கூற்றில் சீராக்கங்கள் செய்வதற்கு அல்லது வெளிப்படுத்துவதற்குத் தேவையான நிகழ்வுகள் எதுவும் நிதிநிலைமைக் கூற்றின் பின்னர் எழவில்லை.

## 26. தொடர்புடைய தரப்பினர்களின் கொடுக்கல் வாங்கல்கள்

### 26.1 பிரதான முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல் வாங்கல்கள்

கம்பனியின் நடவடிக்கைகளைத் திட்டமிடல்,வழிநடத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்களுக்குப் பொறுப்பான மற்றும் அதிகாரம் உடைய நபர்களாக வரையறுக்கப்பட்ட பிரதான முகாமைத்துவ ஆளணியினர் தொடர்புடைய தரப்பினர்களாக உள்ளடக்கப்படுகின்றனர். கம்பனியின் தொடர்புடைய தரப்பினர்களில் பணிப்பாளர்களும் உள்ளடங்குகின்றனர். பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்காக ஆண்டின் போது செலுத்தப்பட்ட நட்டஈடுகள் பின்வருமாறாகும்.

| | 2015/2016 | 2014/2015 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| குறுங்கால நலன்கள் | 4,111,755 | 3,270,327 |

### 26.2 ஏனைய தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இற்கு அமைய தொடர்புடைய தரப்பினர்களாக நிதி ஆண்டின் போது எவரும் அல்லது கொடுக்கல் வாங்கல்கள் எவையும் இணங்காணப்படவில்லை.

# செயற்பாடுகள் பற்றிய மீளாய்வு

கம்பனியின் 2015/16 ஆம் நிதியாண்டிற்கான செயற்பாடுகளினதும் செயற்பாட்டு விளைவுகளினதும் சுருக்க மீளாய்வு பின்வருமாறாகும்.

## .01. இலாபகரத்தன்மை

2015/16 ஆம் ஆண்டிற்கான வரிக்கு முந்திய இலாபம் ரூபா 60.89 மில்லியன்கள் ஆகும். 2014/15 ஆம் ஆண்டிற்கான வரிக்கு முந்திய இலாபம் ரூபா 117.86 மில்லியனகள் ஆகும். இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது ஏறத்தாழ 48%வீழ்ச்சியைக் காட்டுகின்றது. நாட்டின் பசளைக் கொள்கையில் நிலையற்ற தன்மை, உயர் பசளை விலைகள், உயர் ஊழியம் மற்றும் நிர்வாகக் கிரயம், குறைந்த வட்டி வருமானம் மற்றும் உயர் பெறுமானத்தேய்வுக் கிரயம் என்பன நடைமுறை ஆண்டில் குறைந்த இலாபத்தை விளைவித்திருந்தன.




## 02. தேறிய சொத்துக்கள்

கம்பனியானது அதன் தேறிய சொத்து மட்டத்தை சாதகமாக தொடர்ந்து பேணிவருகின்றது. முன்னைய ஆண்டு 2014/15 இன் இறுதியில் காணப்பட்ட தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 760.74மில்லியன்கள் ஆகும். இது நடப்பாண்டின் இறுதியிலும் அதே அளவில் நிலவியது.




## 03. வருமானம்

கம்பனி 562.7 மில்லியன் மொத்த புரள்வைக் கொண்டிருந்ததுடன் இது 46,925.85 மெட்ரிக்தொன் எப்பாவல பாறைப் பொஸ்பேட் (ERP) மற்றும் 7,901.05 மெட்ரிக் தொன் உயர்தர எப்பாவல பாறைப் பொஸ்பேட் (HERP) அடங்கலாக ரூபா 1611.3 மெட்ரிக் தொன் தென்னம் பசளையை முறையே (APM/YPM) கொண்டிருந்தது. இதுவே வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் நிறுவனத்தின் வரலாற்றில் அதிகூடுதலான விற்பனையாகும்.



## 04. மூலதனச் செலவினங்கள்

கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட மூலதனச் செலவினங்கள் பின்வருமாறாகும்.

**கொள்வனவு மற்றும் மூலதன நடைமுறை வேலை**

| ஆண்ட | தொகை (ரூபா) |
|---|---|
| 2011/12 | 62,186,309.00 |
| 2012/13 | 12,855,655.00 |
| 2013/14 | 134,001,412.00 |
| 2014/15 | 121,097,086.38 |
| 2015/16 | 53,251,881.57 |

கம்பனி, ஆண்டின்போது,உற்பத்தி அளவு, உற்பத்தித் திறன், முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் மற்றும் ஆண்டின் போதான செயற்பாடுகளின் தரத்திற்காக கம்பனி முதலீடுகளை மேற்கொண்டுள்ளது. எவ்வாறெனினும், ஆண்டின் போதான குறைந்த விற்பனைகளின் காரணமாக முதலீடுகள் குறைந்திருந்தன.

## 05. பொதுத் திறைசேரிக்கும் அரசாங்க நிறுவனங்களுக்குமான கொடுப்பனவுகள்

இலங்கை பொதுத் திறைசேரி, வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் நிறுவனத்தின் ஒரே பங்குதாரர் ஆகும். 2014/15 ஆம் ஆண்டின் போது பிரகடனப்படுத்தப்பட்ட பங்கிலாபம் ரூபா 30.0 மில்லியன் தொகையானதுடன் நடைமுறை ஆண்டு பங்கிலாபம் எதிர்வரும் வருடாந்த பொதுக்கூட்டத்தில் குறித்துரைக்கப்பட்டு அங்கீகரிக்கப்படும். இதற்கு மேலாக, கம்பனியின் விற்பனை / உற்பத்தியின் மீது வருமான வரி, கனிய வள வரி, உரிமப் பணம் முதலிய பல்வேறு வரிகளையும் விதிப்பனவுகளையும் கம்பனி செலுத்தியிருந்தது.
கடந்த ஐந்து வருடங்களின் போது செலுத்தபப்பட்ட அத்தகைய கொடுப்பனவுகளின் சுருக்கம் வருமாறு.


Dividend,Taxes and other levy
Rs. (Million)
140.00
120.00
100.00
80.00
60.00
40.00
20.00
-
10/11
11/12
12/13
13/14
14/15
15/16
D&T
80.01
121.95
81.17
98.82
86.00
69.01



பொது முகாமையாளர்

# கூட்டத்திற்கான அறிவித்தல்

வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் நிறுவனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் பின்வரும் நோக்கங்களிற்காக 2016 செப்தெம்பர் 28 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு இல. 73 1/1, புதிய களனி பாலம் வீதி, கொழும்பு 14 என்ற இடத்தில் அமைந்துள்ள நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெறும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1. நிறுவனத்தின் அமைப்பு அகவிதியின் 53 ஆவது பிரிவிற்கு அமைய,திரைசேரியின் செயலாளர் (நிறுவனத்தின் தனி ஒரு பங்குதாரர்) வருடாந்த பொதுகூட்டத்தை ஒரு குறுகிய கால அறிவித்தலின் மூலம் கூட்டுவது தொடர்பான எழுத்து மூல ஒப்புதலைச் சமர்பித்தல்.

2. 2015 செப்தெம்பர் 28 ஆம் திகதி நடைபெற்ற வருடாந்த பொதுக்கூட்டத்தின் குறிப்புக்களை அங்கீகரித்தல்.

3. 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்று,அது தொடர்பான கணக்காய்வாளர்களின் அறிக்கை என்பனவற்றைப் பெறுதல்,கருத்துரைத்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளல்.

4. இதனுடன் வெளியிடப்பட்ட ஆண்டறிக்கையினை பெறுதல்இ கருத்துரைத்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளல்.

5. கம்பனியின் ஒரே பங்குதாரர் என்ற ரீதியில் திரைசேரிக்கு 2015∴16 ஆம் ஆண்டிற்கான உரிய பங்கிலாபத்தை பணிப்பாளர்களால் கருத்திற்கொண்டு பிரகடனப்படுத்துதல்.

6. கம்பனியின் அகவிதியிலுள்ள 92 மற்றும் 93 ஆவது உறுப்புரைகளுக்கு அமைய ஓய்வுபெறும் பணிப்பாளர்களுக்காக (வருடாந்த பொதுக்கூட்டத்தில்) கம்பனியின் அகவிதியிலுள்ள 94 ஆவது உறுப்புரைக்கு அமைய மீள தெரிவு செய்வதற்கு உரித்துடையவர்களை மீளத் தெரிவு செய்தல்.

7. 2016/2017 ஆம் நிதியாண்டுக்கு தற்போதைய கணக்காய்வாளர்களை நியமித்து, அவர்களுக்குரிய ஊதியத்தை தீர்மானிப்பதற்கான அதிகாரத்தை பணிப்பாளர்களுக்கு வழங்குதல்.

8. அறிவித்தல் கொடுக்கப்பட்ட வேறு ஏதேனும் விடயத்தைக் கருத்திற்கொள்ளல்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பைனான்சியல் சேர்விசஸ் அன்ட் கொமர்ஷியல் ஏஜன்சிஸ் (பிறைவட்) லிமிடட் லங்கா பொஸ்பேட் நிறுவனத்தின் கம்பனி செயலாளர்கள்

***குறிப்பு:***

பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு வாக்களிப்பதற்கு உரித்துடைய பங்குதாரர் ஒருவர் தனக்குப் பதிலாக பதிலி ஒருவரை நியமித்து தனக்குப் பதிலாக கலந்துகொண்டு வாக்களிப்பதற்காக நியமிக்க உரித்துடையவர் என்பதுடன் பதிலி இக்கம்பனியின் அங்கத்தவராக இருக்க வேண்டியதில்லை. இந்நோக்கத்திற்காக பதிலிப் படிவம் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது.

**பதிலிப் படிவம்**

**வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட் நிறுவனம்**
**பதிலி ஒருவரை நியமிக்கும் படிவம்**

மேற்குறித்த பெயரிலான கம்பனி அங்கத்தவரான …………………………………..… இல் வாழும் ………………………………………………………ஆகிய நான் /நாங்கள் ………………………………இல் வாழும் …………..…………………………………அல்லது அவருக்கு இப்பணி பொருட்டு இயலாத பட்சத்தில் ………………………………..……... இல் வாழும் ………..…………..…………………………. 2016 செப்தெம்பர் 28 ஆம் திகதி நடாத்தப்படுவதற்குள்ள கம்பனியின் வருடாந்த பொதுக் கூட்டத்திலும்,அக்கூட்டத்தில் நடாத்தப்படக் கூடிய ஒவ்வொரு வாக்கெடுப்பின் போதும் என்/ எங்கள் பொருட்டும் என்/எங்கள் சார்பாகவும் ˙ வாக்களிப்பதற்கு எனது/எங்களது பதிலி ஒருவராக இத்தால் நியமிக்கின்றேன்/ நியமிக்கின்றோம்.

இரண்டாயிரத்து பதினாறாம் ஆண்டு …………………………………. மாதம் ……………….……… ஆம் திகதி கையொப்பமிடப்பட்டது.

கையொப்பம் ……………………………..

**குறிப்பு**

- பதிலி ஒருவர் தான் இணங்கும் பட்சத்தில் கூட்டத்தில் கொண்டுவரப்படும் ஏதேனும் தீர்மானத்திற்கு வாக்களிக்கலாம்
- பதிலி ஒருவர் கம்பனியின் அங்கத்தவரொருவராக இருக்க வேண்டியதில்லை
- இங்கு பின்புறத்தில் நிரப்புவதற்காக உள்ள அறிவுறுத்தல்கள் கவனிக்கத்தக்கவை.